Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P. 0212225969
Hotline 0212229497
(C3175)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 24 ஞாயிற்றுக்கிழமை (10.11.2013) பக்கங்கள் 20 ஓசை - 041

# பொதுநலவாய மாநாட்டில் மன்மோகன் பங்கேற்கார்



(புதுடில்லி)

எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சிமாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்க மாட்டாரெனவும் பங்குபற்றவுள்ள இந்தியக் குழுவிற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையில் வெளியுறவுத் துறை செயலாளர் சுஜாதா சிங், கூடுதல் செயலாளர்கள் பவண் கபூர், நவ்தேஷ் சர்மா உள்ளிட்டோர் இடம்பெறுவர் எனவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியப் பிரதமரின் பயணம் தொடர்பாக தமிழகம் மற்றும் காங்கிரஸ் கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்பலையை அடுத்தே பிரதமர் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதனை தவிர்த்துள்ளதாகவும் அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பி.ரி.ஐ, என்.டி.ரி.வி., இந்துஸ்தான் ரைம்ஸ், ரைம்ஸ் ஒவ் இந்தியா, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய ஊடகங்களே பிரதமர் கொழும்பு செல்ல வாய்ப்பில்லையெனத் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக அந்த ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மன்மோகன்சிங்கின் இல்லத்தில் நேற்று முன்தினம் மதியம் நடந்த காங்கிரஸ் உயர் மட்டக் குழுவின் கூட்டத்தில், தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பை அடுத்தே, கொழும்புப் பயணத் திட்டத்தை இந்தியப் பிரதமர் கைவிடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொமன்வெல்த் மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்பதா என்பது குறித்து இறுதி முடிவெடுப்பதற்காக, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் உயர்மட்டக் குழு சுமார் ஒன்றரை மணி நேரமாக ஆராய்ந்தது.

இந்தக் கூட்டத்தில், பிரதமர் மன்மோகன்சிங், மூத்த அமைச்சர்கள், ஏ.கே.அன்ரனி, ப.சிதம்பரம், சுசில்குமார் ஷிண்டே,

19 ஆம் பக்கம் பார்க்க

## மாநாட்டில் பங்கேற்காமை; விளக்கவுள்ளார் மன்மோகன்

(புதுடில்லி)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்காமைக்கான காரணத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு விளக்கி கடிதம் எழுதவுள்ளார். என்ன காரணத்திற்காக தம்மால் அமர்வுகளில் பங்கேற்க முடியவில்லை என்பதனை பிரதமர் சிங், ஜனாதிபதி மகிந்தவிற்கு விளக்கி இன்று கடிதம் எழுதவுள்ளார்.

இதேவேளை பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றும் இந்தியப் பிரதிநிதிகள் குழுவிற்கு வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமை தாங்குவார்

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தகால இழப்புகள்; மதிப்பிட நடவடிக்கை

(கொழும்பு)

கடந்தகால யுத்தத்தினால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடமை இழப்புக்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இது தொடர்பான மதிப்பீடுகளை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக அதற்கான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு எண்ணியுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.சீ.ஏ.குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இதன்பொருட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்டிருந்த பிரதேசங்களிலுள்ள அனைத்து வீடுகளில் இருந்தும் தகவல்களை திரட்டுவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

## எந்தவொரு அழுத்தத்திற்கும் அடிபணியாது அரசாங்கம்

### அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்கும் எந்த உரிமையும் பிரித்தானியாவுக்கோ வேறு எந்த நாடுகளுக்கோ இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய சர்வதேச விசாரணை ஒன்றின் அவசியம் குறித்து தனது இலங்கை விஜயத்தின் போது வலியுறுத்தப்படும் என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்திருந்தமை தொடர்பில் பதிலளிக்கும் போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரமான நாடு என்ற வகையில் அழுத்தங்களுக்கு அடிபணிய இலங்கை தயாரில்லை.

19 ஆம் பக்கம் பார்க்க



06

யார்?



07

நாசம்



18

50 மணி நேரம்

## இளைப்பாறல் மண்டபத்திற்கு மண்கும்பானில் அடிக்கல்



(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மண்கும்பான் பகுதியில் யாழ். - குறிகட்டுவான் பிரதான பாதையை அண்மித்து பொதுமக்கள் இளைப்பாறல் மண்டபமொன்று அமைக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் உறவு மற்றும் பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சின் மூலம் 50 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இம் மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

மண்கும்பான் பிள்ளையார் தேவஸ்தான

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய அமர்வுகளை புறக்கணிக்கும் ஜே.வி.பி.

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டின் அமர்வுகளை புறக்கணிக்கப் போவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்ததாவது,

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு அரசாங்கம் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ள போதும், கட்சி அந்த மாநாட்டை புறக்கணிக்கும்.

இந்த மாநாடு பொது மக்களின் பல ஆயிரம் கோடி ரூபாவை செலவிட்டு ஏகாதிபத்தியவாதிகளை


19 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைப்பாவையாக பொதுநலவாய மாநாடு

### இளவரசர் சார்ள்ஸ் விசனம்

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டை சில நாடுகள் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் அரசியல் கைப்பாவையாக பயன்படுத்த முயற்சிப்பதாகவும் பல்வேறு நாடுகளின் அந்த முயற்சிகளுக்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க



**இன்றைய தினம் 56 ஆவது அகவை காணும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**– தினமுரசு குடும்பம் –**

## வீடு விற்பனைக்கு

சதுமலையில் ஒரு வீடும்,ஒரு தொகுதி பாவித்த கூரைத்தக ரங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு-க.சீவரட்டணம் (சிவ ராசா),சதுமலை தெற்கு,றியிஸ் ரர் சம்பந்தர் ஒழுங்கை (காலை, மாலைகளில் தொடர்பு கொள்க) (R/324)

## அமைச்சருக்கு வாழ்த்து

இன்றைய தினம் 56 ஆவது அகவை காணும் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந் தாவிற்கு உள்ளம் கனிந்த வாழ்த் துக்களை ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு. சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 203 திகதி 2013.11.08 வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து

08 32 41 61 H

பரிசுத் தொகை ரூபா. 11,330,260/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | - | - |
| [illegible] | 50,000/- | 05 | 250,000/- |
| [illegible] | 1,000/- | 205 | 205,000/- |
| [illegible] | 1,000/- | 353 | 353,000/- |
| [illegible] | 60/- | 9135 | 548,100/- |
| [illegible] | 40/- | 4872 | 194,880/- |
| [illegible] | 20/- | 119041 | 2,380,820/- |
| [illegible] | 20/- | 17295 | 345,900/- |
| [illegible] | 11,330,260/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,277,700/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 11,563,400/-

2013.11.12ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

நியத்த ஜய

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

[illegible]

(C/3186) web : www.dlb.lk


### கன்னி சுவாமிகளுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்) சபரிமலை ஐயப்பன் யாத்திரை செல்லும் கன்னி சுவாமிகளுக்கான கலந்துரையாடல் இன்று இடம் பெறவுள்ளது.

நல்லூர் ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பி.ப. 3.00 மணிக்கு முதன் முறையாக சபரிமலை யாத்திரை செய்யும் கன்னி சுவாமிகள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் ஞாயிறன்று சபரிமலை விரதம் பூணும் சுவாமிகளுக்கான மாலை அணிவும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாமர மக்களுக்காய் உழைக்கும் பண்பாளனே வாழி!



தன்னலம் கருதாது தமிழருக்காய்
தனை அர்ப்பணித்த தளபதியே!
தூர நோக்கும் துணிவுடன் பணிவுமாய்
உள்ளத்தில் சமநோக்கு உடையராய்
கொள்கையில் குறியாய் குணத்தில் உயர்வாய்
முயற்சியில் முதலாய் செயலில் ஒழுங்காய்
அனைவரையும் வாழ வைத்த தோழாரே
உம்மை வாழ்த்துகின்றோம் போற்றுகின்றோம்!

கள்ளமில்லாச் சிரிப்புடனே கடுகளவும் பயமின்றி
கடமையில் கண்ணியமாய் அயராது உழைத்து
சாதனைகள் பல செய்தீர்
நாடாளுமன்ற உறுப்பினராய்
ஜனநாயக கட்சியின் செயலதிபராய்
சாதி,மத பேதமின்றி
மக்கள் சேவை மகேசன் சேவை என
அனைவரையும் வாழவைத்த தலைவரே
உம்மை வாழ்த்துகின்றோம்!
தோல்வியை கண்டு துவண்டிடாமல்
வெற்றியைக் கண்டு இறுமாந்திடதமல்
தடைகளைக் கடந்து தலையை நிமிர்த்தி
பாங்குடன் உழைத்திட்ட பண்பாளரே
வாழ்த்துகின்றோம் போற்றுகின்றோம்

க.ப.ஜெகதீஸ்வரா
முன்னாள் பணிப்பாளர்
பனை தென்னை அபிவிருத்திச் சபை

## மக்கள் வாழ்வு செழிக்க, தங்கள் சேவை சிறக்க வாழ்த்துகிறோம்!

செல்லும் திசையில் சொல்வதைச் செய்யும் மக்கள்
சேவகனே!
தமிழர் தம் விடிவிற்காய் தானைத் தளபதியாய்
உருவெடுத்த தலைவரே!
அகவை ஐம்பத்தாறில் கால் பதிக்கும் உமை நாம்
வாழ்த்துகிறோம் உவகையுடன்,
திக்கெட்டும் திசையெங்கும் போற்றிடும் உத்தமராய்,
நேசித்த தமிழ் மக்களின்
உரிமைக்காய் உங்களையே உவந்தளித்த
தற்கொடையாளி நீங்கள்.

கயவர் விரித்த பல மரண வலைகளில் மரணதேவனும்
உமைக் கண்டு
மண்டியிட்டிட, காந்திக்கு பின் கதர் வேட்டியுடன் நாம்
கண்ட தேசத்தந்தை நீங்கள்,
தங்கத் தாடிக்குள் தவழும் உங்கள் முகம் பார்க்கும்
திசையெங்கும்
வளங்கொழித்து செழித்தலாகிறது. ஓர் தனிமனித
சரித்திரமாய் - ஓய்வில்லாத
உங்கள் மக்கள் சேவை தொடர வாழ்த்துகின்றோம்



கந்தசாமி கமலேந்திரன்
(வடமாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர்)
மற்றும் தோழர்கள்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,
யாழ்.மாவட்டம்

(R/2580)

# இரணைமாதா நகர் கிராமத்திற்கு போக்குவரத்து சேவை கிடைக்குமா?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமாதா நகர் கிராம மக்கள் கிராமத்திற்கென போக்குவரத்துச் சேவை இன்மையால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவிக் கின்றனர்.

மீளக்குடியமர்ந்த இப்பகுதி மக் கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போக்குவரத்துச் சேவை மிக அவசியமாக வுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இக் கிராமம் ஒரு பின்தங்கிய நிலை யில் அடிப்படை வசதிகளற்ற ஒரு பகுதியாகக் காணப்படுகிறது.

இக்கிராமத்தில் வாழும் மக்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ் வாதார ரீதியாக மிகவும் கஷ்டத்தின் மததியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கும் நிலையில் தமது தொழில் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு பேருந்து சேவை இல்லாமை பெரும் குறைபாடாக உள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை போக்குவரத்து சேவை இன்மையால் தாம் நடந்தும் பணம் கொடுத்து முச்சக்கரவண்டிகளில் செல்வதாகவும் தெரி விக்கும் இக்கிராம மக்கள் இதனால் பாட சாலை மாணவர்களே பெரிதும் பாதிக்கப் படுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கிராமத்தில் யுத்த அனர்த் தங்களின் பின்னர் 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி வசித்து வரும் நிலையில் இக்கிராமத்திற் குரிய போக்குவரத்து பிரச்சினையை தீர்க்க உரிய அதிகாரிகள் நடவ டிககை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கே,சி)

# சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவ பரிசோதனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாற்று வலுவுள்ளோர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான மருத்துவ பரிசோதனை கொழும்பிலிருந்து வந்த விசேட மருத்துவ அதிகாரிகள் குழுவால் கடந்த வியாழககிழமை காலை 9 மணிமுதல் நடைபெற்றது

கிளிநொச்சி மாவட்ட செயலக வளா கத்தில் நடைபெற்ற இந்நிகழ்வை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டி ருந்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் செல்ல முத்து ஸ்ரீநிவாசன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் கேணல் ராஜபக்ஷ, மருத்துவ அதிகாரிகள், மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொழும்பிலிருந்து மருத்துவ அதி காரிகளை அழைத்து வரும் பணியை கிளிநொச்சி மாவட்ட பாதுகாப்பு படை களின் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா மேற்கொண்டிருந்தார்.

இந் நிகழ்வில் 200 வரை கலந்து கொண்டனர். மோட்டார் சைக்கிள், ஆட்டோ, கார் போன்ற வாகனங்களை செலுத்தக் கூடிய தகுதியுள்ள உடல் நிலையைக் கொணடோர் 70 பேர் வரை இதில் தெரிவு செயயப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப் பட்டது.

இவர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திர எழுத்துப் பரீட்சை, வாகன ஓட்டப் பரி சோதனை போன்ற வழமையான நடவடிக் கைகள் பின்னர் இடம்பெறும்.

அரசாங்கத்தின் வீதிப்போக்கு வரத்து சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் பொருத்தமான சட்ட திருத்தங்களை மேற் கொள்வதன் மூலம் மாற்றுவலுவுள்ளோரில் பெரும பான்மையினருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட முடியும் என அறி விக்கப்பட்டுள்ளது. (90)

# சர்வதேச நல்லொழுக்க தினம் மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

கரவெட்டிக் கோட்டம் மேற்பிரிவு

பேச்சு:

கு.வைதேகி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ம.சர்மினி (நெல்லியடி மத்திய மகா வித்தியாலம்).

கட்டுரை

த.மகிழினி (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ம.அருள்மொழி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ. ஆர்த்தி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

கவிதை

ர.பிரிந்தா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), க.சங்குலஷ்சுமி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சி.சுகன்யா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

பருத்தித்துறைக் கோட்டம் ஆரம்பப்பிரிவு

பேச்சு

நி.நிருபா (வட இந்து ஆரம்ப பாடசாலை), வெ.அருட்குமரன் (வல்வை மகளிர் மகா வித்தியாலயம்), அ.றொசாயினி (சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை).

கட்டுரை

ஜெ.சானுகா (வடஇந்து ஆரம்ப பாடசாலை), ந.அனுசன் (பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்), இ.லசிக்கா (துன்னாலை வடக்கு மெ.மி.த.க. பாடசாலை).

*(தொடரும்...)* (109)


வேகத்தைக் குறையுங்கள்

உயிர்களைக் காப்பாற்றுங்கள்





**மதுபோதையில் பயணம் செய்வதை தவிருங்கள்.**

வாகனச் சாரதிகளே! மது போதையில் வாகனத்தைச் செலுத்திச் செல்லா தீர்கள்.

(நா.சிவபாலன்)


# சொந்தச் சமூகத்துக்கே சூனியம் வைப்பவர்கள்...




சிங்கள ஆதிக்கத்தைப் பற்றிப் பேசும் தமிழகத்தினர் இலங்கைத் தமிழரின் மீதான இந்திய ஆக்கிரமிப்பையும் தமிழகத்தின் ஊடுருவலையும் பண்பாட்டு ஆதிக்கத்தையும் பற்றிப் பேசுவதில்லை.

இங்கே இருக்கிற தமிழ்த் தலை களும் அதைப்பற்றியெல்லாம் கதைப்பதில்லை.

எங்கள் தமிழ்த் தலைவர்கள் தமிழகத்துக்கு எத்தனை தடவைகள் போய் வருகிறார்கள் தெரியுமா? பலருக்கு அங்கேதான் வீடுகளே உண்டு.

இப்பொழுது கூட சிறிதரன் எம்.பி அங்கேதான் நிற்கிறார். ஈழத் தமிழர்களின் தலையாய பிரச்சினைகளான மீனவர் பிரச்சினை, அகதிகள் விவகாரம், அரசியல் மற்றும் பண்பாட்டு ஆதிக்கம் எனப் பலவற்றைப் பேச வேணும்.

ஆனால், இதையெல்லாம் விட்டு விட்டு, பொழுது போக்குவதற்காக சினிமாப்படம் பார்ப்பதைப் போல, அங்கே செல்லாக் காசாக இருக்கும் ஆட்களைச் சந்தித்துப் போட்டோ எடுத்துக் கொண்டிருக்கிறார் ஒரு மக்கள் பிரதிநிதி.

இந்த லட்சணத்தில்தான் இருக்கிறது, தமிழ்த் தேசிய அரசியல் அல்லது தமிழ் விடுதலை அரசியல்.

உண்மையில் இவர்கள் இந்தியத் தலைவர்களிடத்திலும் இந்திய முத லாளிகளிடத்திலும் தமிழகத் தலைவர்கள், அரசியல்வாதிகளிடமும் நக்கிப் பிழைக்க வேண்டும் என்பதற்காக தங்கள் சொந்த மக்களை விற்கிறார்கள்.

இது பிள்ளையை விற்றுப் பிழைப்பதற்குச் சமம்.

இல்லையென்றால், இவர்கள் இருக்கவே கண்ணை மூடி அடிக்கிறதைப் போல கடற்கொள்ளை நடக்குமா?

கச்சதீவை இலங்கைக்கு எழுதிக் குடுத்திட்டு, இப்ப கடல் முழுவதிலும் நிற்கிறார்கள் இந்திய மீனவர்கள்.

சந்தையில் எந்தப் பொருள் என்றாலும் அது இந்தியப் பொருள் என்பதே நிலைமை.

தெருவில் ஓடுகிற வண்டிகளில் பாதிக்கு மேல் இந்திய வாகனங்களே.

உடுக்கிற உடுப்புகளில் இருந்து நெற்றியில் ஒட்டுகிற 50 சதம் பெறு மதியான பொட்டு வரையில் இந்தியச் சரக்குகளே.

இப்ப வெங்காயம் கூட இந்தியாவில் இருந்தே வருகிறது.

நமது உற்பத்திகளைப் பெருக்குவதைப் பற்றியோ, உள்ளூர் உற்பத்தி யாளர்களை ஊக்கப்படுத்துவதைப் பற்றியோ இவர்கள் யோசிப்பதில்லை.

எங்கள் மக்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்றும் கருதுவதில்லை.

சனங்களுக்குத் தேவையான அடிக்கட்டுமானங்களைச் செய்தால் தான் அவர்கள் தங்களின் உற்பத்திகளைப் பெருக்க முடியும்.

ஆனால், இதற்கு இந்தத் தமிழ்த் தலைமைகள் ஒரு போதுமே ஆதரவளிப்பதில்லை.

சனங்கள் எல்லாவற்றுக்கும் யாருடைய காலையாவது பிடித்துக் கெஞ்சிக் கொண்டிருக்க வேணும்.

சொந்தக் காலில் அவர்கள் நின்றால், சுயமாகச் சிந்திக்கத் தொடங்கி விடுவார்கள். அப்படி அவர்கள் சிந்திக்கத் தொடங்கினால்....!!!????

தங்களின் பிழைப்புக்கு ஆபத்தாகி விடும். தங்களின் குள்ளத்தனங்களையும் கள்ளத்தனங்களையும் குத்துக்கரணங்களையும் கண்டு பிடித்து விடுவார்கள்.

ஆகவே தங்களைப் போல அவர்களும் யாருடைய காலையாவது பிடித்துக் கொண்டு காலம் முழுவதும் இருக்கட்டும் என்று விரும்புகிறார்கள்.

சேர்ந்து நடிக்கிறார்கள் அனைவரும்.

இப்படித் தலைவர்கள் நாடகம் போட, சனங்கள் இருட்டுக்குள் முழிசிக் கொண்டிருக்கிறார்கள்.

விடிய விடிய நாடகம், விடிந்தால்....?

அரசியல் தீர்வுக்காக ஆதரவைத் தாருங்கள் என்று வாறவன் போற வன் காலில் எல்லாம் விழுந்து கும்பிடுகிற மாதிரி, எல்லாத் தேவைகளுக்கும் இன்று விழுந்து கும்பிடும் நிலைக்குத் தமிழ்ச் சமூகத்தைக் கொண்டு வந்து விட்டார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுப் பழமை நிறைந்த பெருமைக்குரிய பண்பாட் டாளர்கள், வீரத் தமிழர்கள் உலகெங்கும் மண்டியிட்டுக் கொண்டிருக் கிறார்கள். தாழ்ந்து பறக்கிறது தமிழ்க் கொடி.

இதையெல்லாம் உணர்ந்து கொள்வதற்கு தமிழ்மூளையில் சரக்கில்லை.

அதிலும் படித்தவர்களுக்குத்தான் ஆகக் கூடுதலான மண்டைப்பிழை.

சொந்தச் சமூகத்துக்கே துரோகம் இழைப்பவர்களை வரலாறு ஒன்றும் சும்மா விடாது, சிலுவையில் அவர்களை அறைந்தே தீரும்.

அதிர்ஷ்டத்தின் வலக்கை தொழில். இடக்கை சிக்கனம்.
- காண்டேகர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வலி இல்லாதவர்க்கு அவசரம் இல்லை!

தமிழ் மக்களுக்குத் தாங்களே தலைவர்கள் என்று உரிமை கோருபவர்கள் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஏன் ஓரங்கட்டுகின்றார்கள்–தள்ளிப்போட்டுக்கொண்டே வருகிறார்கள் என்ற கேள்வியைக் கேட்டு, கூட்டமைப்பின் வலதுசாரி நிலைப்பாடுதான் அரசியல் தீர்வைப் புறந்தள்ளுகின்றது என்று தனது கட்டுரையில் விளக்கியிருக்கிறார் சங்கர சிவன்.

அன்றாட பிரச்சினைகளோடு மல்லுக்கட்டும் மக்களும், வாழ்வைக் கொண்டுநடத்த அவர்கள் படும் சிரமங்களும் இந்தத் தலைவர்களுக்குப் பொருட்படுத்துவதற்குத் தோன்றாததில் வியப்பில்லை. மேட்டுக்குடி சார்ந்தவர்களாகவும் வறுமை அவலங்களின் கோரத்தைச் சந்தித்திராதவர்களாகவும் இருப்போர்க்கு, மக்களது அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென் பதில் கவனம் குவியாது.

மாறாக, பழிக்குப் பழி வாங்குவதும், எமக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையானால் சரி என்று ரோசம் பார்ப்பதும், எதிர்ப்புக் கோஷங்களால் மக்களை உணர்ச்சிகரப்படுத்தி பதவிகளை நீடித்துக் கொண்டிருப்பதுமே அவர்களது கவனமாக இருக்கும்.

கூட்டமைப்புத் தலைவர்களைப் பொறுத்தவரையில், அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அலையும் மக்களை அற்ப சலுகைகளுக்காக அலைபவர்கள் என்றே வருணித்து வந்திருக்கிறார்கள். அடிப்படை வசதிகள் அனைத்தையும் இழந்து அல்லலுறுவோரின் நோவையும் வலியையும் தேவைகளையும் அவர்களறியார்.

வலியை மறக்க அபின் கொடுப்பது போலத்தான் மக்களது அன்றாடப்பாட்டின் வலிகளையும் இனரீதியான எதிர்ப்புணர்ச்சி போதையில் மறந்துவிடச் சொல்கிறார்கள். உண்மையில் வாழ்க்கைப்பாட்டின் வலி தெரிந்தவர்களுக்குத்தான் தீர்வின் அவசரம் புரியும். அதைச் சொல்லும் ஒரு கதை:

ஒரு மலைப் பகுதியில் மலை உச்சியில் ஒரு குழுவினரும், கீழ்ப்பகுதியில் மற்றொரு குழுவினரும் வாழ்ந்து வந்தனர். இரு குழுவினருக்குமிடையில் தீராத பகையும் இருந்து வந்தது.

ஒரு முறை உயரத்தில் இருந்தவர்கள் கீழ்ப்பகுதியைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்தி விட்டார்கள்.

சமூகத்திலிருந்த சில பெரியவர்கள், மலை மேல் இருந்த குழுவினரிடம் சமாதானமாகப் போய் பேசினால் குழந்தையை மீட்டு வந்து விடலாம் என்று கீழ்ப்பகுதியிலிருந்த இளைஞர்களிடம் அறிவுரை கூறினர்.

குழந்தையை மீட்டு வர இளைஞர்கள் சிலர் முன்வந்தனர். ஊர்ப்பெரியவர்களும், இந்தச் செயலை முடிக்க இவர்கள்தான் மிகச் சிறந்தவர்கள் என்று அவர்களைத் தேர்வுசெய்து அனுப்பி வைத்தனர். இளைஞர்கள் விரைவில் குழந்தையைக் கொண்டு வருகிறோம் என்று கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை. அந்த இளைஞர்களால் போதிய பயிற்சியில்லாததால் அந்த ஒரு பகுதியை ஏறிக் கடக்க முடியவில்லை. இருப்பினும் அவர்கள் தொடர்ந்து விடாமுயற்சியுடன் அப்பகுதியைக் கடக்க பலமணி நேரமாக பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர்.

அப்போது தம் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் மேலேயிருந்து கடத்தப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வருவதைப் பார்த்தார்கள். அவள் அருகில் வந்தவுடன், "நாங்கள் இந்த மலையில் ஏற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நீ எப்படி மலைக்கு ஏறிச் சென்றாய்?" என்று வியப்புடன் கேட்டார்கள்.

அவள் தன் இடுப்பிலிருந்த குழந்தையைக் காட்டி, "இது உங்கள் குழந்தை இல்லை,என் குழந்தை. அது ஒன்றுதான் வித்தியாசம்" என்று பதில் சொன்னாள். - ஆசிரியர்.

# நியமனத்துக்காக ஏங்கும் சிற்றூழியர்கள் கவனம் எடுத்து விமோசனமளிப்பது யார்?

வவுனியா மருத்துவமனையில் நீண்டகாலம் அமைய அடிப்படையில் பணிபுரிந்த போதிலும் இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்காமல் மிகவும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கும் சிற்றூழியர்கள் தமது மன ஆதங்கத்தை இப்போது வெளியிட்டுள்ளனர்.

யுத்த காலத்தில் பல்வேறு கஷ்டநேரங்களில் பணியாற்றிய மேற்படி சுகாதார சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாது ஒருநாளேனும் கடமை புரியாதவர்களுக்கு தற்போது நியமனம் வழங்கியதன் மூலம் தாம் அதிகாரிகளால் ஏமாற்றப்பட்டுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலையின் சுகாதார சிற்றூழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தின்போது வவுனியா வைத்தியசாலையில் ஏற்பட்ட ஆளணி பற்றாக்குறை காரணமாக வடமாகாண ஆளுநரின் உத்தரவுக்கமைய சுமார் ஐம்பது ஆண் சிற்றூழியர்களை வைத்தியசாலை நிர்வாகம் நேர்முகப்பரீட்சை மூலம சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்களாக பணிக்கமர்த்தியது.

இதன்படி சுத்திகரிப்பு தொழில்களான நோயாளிகளை பராமரித்தல், வைத்தியசாலை விடுதிகளை அழகுற வைத்தல், இயலாத நோயாளிகளை குளிப்பாட்டுதல், உடைந்த மலசல கூடங்களை சீரமைத்தல், மருத்துவர்களுக்கு உதவுதல், நோயாளர்களின் விடுதிக்கேற்ப தாதியர்களுக்கு உதவியாக பணி புரிதல், வைத்தியசாலை கட்டட நிர்மாணங்களுக்காக கட்டட தொழிலாளர்களாகவும் வேலைக்கு அமர்த்தப்பட்டமை, வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தின்போது கொண்டுவரப்பட்ட இறந்தவர்களின் உடல்கள் துர்நாற்றம் எடுத்த வேளையில் அவற்றையும் அகற்றி பிரேத அறையையும் சுத்தமாக வைத்திருந்தமை போன்றவற்றை திறம்பட செய்தல் மூலமாக வைத்தியசாலையின் சுகாதாரத்திற்கும் செம்மையான அழகிற்கும் அதனூடான ஏனைய தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கும் நாம் அதிகளவு பங்களிப்புச் செய்தோம் என்பது எவருமே மறுக்க முடியாத உண்மை.

அத்துடன் இவ்வாறு நாம் தொடர்ச்சியாக கடமையாற்றி வருவதற்கான காரணம் விரைவில் நாம் வைத்தியசாலையில் நிரந்தர சிற்றூழியர்களாக நியமிக்கப்படுவோம் என்று வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் வாக்குறுதி வழங்கியமையாலாகும்.

அதனை நம்பி நாங்கள் வாழ்க்கை செலவின் மட்டத்தை விட குறைந்த ஊதியமான 400 ரூபாவைப் பெற்றுக்கொண்டு 12 மணித்தியாலங்களுக்கு மேலான வேலை நேரத்துடன் தொடர்ச்சியாக மூன்றரை வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறோம்.

எமது நிரந்தர நியமனம் வழங்கப்படாத இந்த அநீதியானது. தமிழ், சிங்கள, முஸ்லிம் இன வேறுபாடின்றி நடந்தேறி வருகின்றது.

இறுதிக்கட்டமாக எமது சிற்றூழியர்கள் இருபத்தாறு பேரின் நியமனத்தை உடனடியாக வழங்குமாறு சம்மந்தப்பட்ட தரப்புகளிடம் கோரி நிற்கின்றோம். அவ்வாறு மேற்கொள்ளாத பட்சத்தில் நாங்கள் அடுத்தகட்ட எமது நிலையின் நகர்வுகளை மேற்கொள்வோம்.

அதுமட்டுமன்றி இவ்வாறு தொடர்ச்சியாக புறக்கணிப்புக்குள்ளான எங்களின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கும் கையறு நிலைகளுக்குள்ளும் எங்களுக்குள் யாராவது மன அழுத்தம் காரணமாக ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழுமானால் இது தொடர்பான அரச தரப்பினரும் சுகாதாரத்துறை உயர் அதிகாரிகளுமே பொறுப்பாளிகளாவார்கள்.

எங்கள் சிற்றூழியர்களது குடும்பங்களின் வயிற்றில் அடித்து தமது சுகபோக அரசியலை மேற்கொள்ளும் அரசியல் சக்திகளுக்கு எதிராகவும் எங்களுக்காகவும் மனச்சாட்சியுள்ள மனிதர்கள், சமூக முற்போக்கு சக்திகள், தொழிற்சங்கங்கள், புத்திஜீவிகள் என்போர் குரல் கொடுப்பீர்கள் என நம்பி நாம் காத்திருக்கிறோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் யார்?

## சந்திரிக்கா மத்தியில் யோசனை

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. ரணில் விக்ரமசிங்க தலைமைப் பதவியை விட்டு விலக வேண்டுமென கோரி வரும் தரப்பினரே இவ்வாறு சந்திரிக்காவை சந்தித்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

எதிர்கால அரசியல் நிலைமைகள் மற்றும் கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது பொதுவான வேட்பாளர் ஒருவரை நியமிபபது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைத்து அதன் மூலம் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நியமிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# வடக்கின் யுத்தக்குற்ற அறிக்கையை அவசரமாக கோரியது அமெரிக்கா

## காலம் கடந்து கசிகிறது இரகசியம்

(வோசிங்டன்)

வடக்கில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் ஜெனிவாவுக்கான அமெரிக்க தூதுவரிடம் மிக மிக அவசரமாக கோரியிருந்ததாக விக்கிலீக்ஸ் பரபரப்புத்தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் அமெரிக்காவிடம் வரையறையான வளங்கள் மாத்திரமே வடக்கின் போர் வலயத்தில் இருப்பதால், போர்க் குற்றம் பற்றிய அறிக்கையை தயாரிப்பதில் சிரமங்கள் இருப்பதாக ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதுவர் கிளின்ட் வில்லியம்சன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அறிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் இப்போது கசிய விட்டுள்ள கேபிள் தகவல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கத் தூதுவர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜெக் டி மையோ, ஐக்கிய நாடுகளின் பிரதி மனித உரிமை ஆணையாளர் குவாங் வா காங் மற்றும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் ஆசிய பிராந்தியத்திற்கான பதில் பணிப்பாளர் பாஸ்கேல் மெரியூ ஆகியோரை தனித் தனியாக சந்தித்து இலங்கையின் போர் விடயங்கள் பற்றி பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புகள் 2009 ஆம் ஆண்டு ஜுலை 9 ஆம் திகதி நடந்துள்ளது.

இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், அத்தகைய குற்றங்களைப் புரிந்தவர்களின் அடையாளம் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையை 45 நாட்களுக்குள் காங்கிரஸுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என அமெரிக்கத் தூதுவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு பதில் அனுப்பியிருந்த தூதுவர், போர் வலயத்தில் அமெரிக்க அரசுக்கு வரையறுக்கப்பட்ட அணுகலே இருக்கின்றது. இதனால் மோதலில் என்ன நடந்தது, போர்க்குற்றங்களுக்கு யார் பொறுப்புக் கூற வேண்டும் என்பது பற்றிய உறுதியான ஆதாரத்தை முன்வைப்பது மிகவும் சிரமானது எனக் கூறியிருந்தார்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் என்ன நடந்தது என்பது குறித்து ஜெனிவாவில் உள்ள அமெரிக்க தூதுவர் வில்லியம்சனுக்கும் வோஷிங்டனுக்கும் இடையில் 2009 யூலை 15 ஆம் திகதி நடந்த இரகசிய கேபிள் உரையாடலின் தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் போர் நடைபெற்ற காலப் பகுதியில் என்ன நடந்தது என்பது பற்றி அறிய அந்தக் களத்தில் இருந்து செயற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து பெறும் அறிக்கையிலேயே பெரும்பாலும் இராஜாங்க திணைக்களம் தங்கியிருக்க வேண்டும.

அரச படைகள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டு தரப்பினராலும் குற்றங்கள் இழைக்கப்பட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன. புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதாகவும் போர் வலயத்தில் இருந்து வெளியேற முயற்சிக்கும் பொதுமக்களை கொலை செய்ததாகவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டிருந்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டமைப்பின் வலதுசாரி நிலைப்பாடு அரசியல் தீர்வைப் புறந்தள்ளுகின்றது

சங்கர சிவன்


தமிழ் மக்களுக்குத் தாங்களே தலைவர்கள் என்று உரிமை கோருபவர்கள் அம்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகச் சர்வதேச அமைப்புகள் உட்படப் பல்வேறு தரப்புகளுக்குச் சமர்ப்பிக்கும் மகஜர்களிலும் உள்ளூரில் பேசும் பேச்சுகளிலும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இடம்பெறுவதில்லை. அரசியல் தீர்வை இவர்கள் ஏன் ஓரங்கட்டுகின்றார்கள் என்று தமிழ் மக்கள் கேட்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இனப்பிரச்சினையே தமிழ் மக்களின் பிரதான பிரச்சினை. அன்றாட வாழ்வில் தமிழ் மக்கள் முகங்கொடுக்கின்ற உடனடிப் பிரச்சினைகள் அனைத்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பதன் விளைவாகத் தோன்றியவை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தால் உடனடிப் பிரச்சினைகள் தாமாக மறைந்துவிடலாம். ஆனால், தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினையைப் புறந்தள்ளிவிட்டு மற்றைய பிரச்சினைகளிலேயே கவனம் செலுத்துகின்றார்கள். தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூட இனப்பிரச்சினை பற்றி இவர்கள் பேசுவதில்லை. மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் வகையில் உடனடிப் பிரச்சினைகள் பற்றியே ஆவேசமாகப் பேசுகின்றார்கள். கூட்டமைப்பின் மாகாண சபை நிர்வாகமும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்படுவதாக இல்லை. எனவேதான் தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வை ஏன் புறந்தள்ளுகின்றார்கள் என்ற கேள்வியைத் தமிழ் மக்கள் கேட்க வேண்டும்.

இனப்பிரச்சினையே தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை. அன்று முதல் இன்று வரை இதுவே தமிழ்த் தலைவர்களின் அரசியல் இருப்புக்குக் காரணமாக உள்ளபோதிலும் இத்தலைவர்கள் பிரச்சினையின் தீர்வில் ஒருபோதும் உண்மையான அக்கறை செலுத்தவில்லை. அரசியல் பிரசாரத்தில் இனப்பிரச்சினையைப் பிரதான பேசு பொருளாகக் கையாண்ட தமிழரசுக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூடப் பிரச்சினையின் தீர்வில் உண்மையான அக்கறை செலுத்தவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் பிரசாரக் கூட்டங்களில் இனப்பிரச்சினை பற்றிப் பேசுவதே இல்லை. அன்றாடப் பிரச்சினைகள் பற்றியே பேசுவார்கள். இப்பிரச்சினைகளை மையப்படுத்தியே ஆர்ப்பாட்டங்களையும், உண்ணா விரதங்களையும் நடத்துவார்கள். இனப்பிரச்சினை இவர்களுக்குப் பேசாப் பொருள் ஆகிவிட்டது.

பாரம்பரிய தமிழ்க் கட்சிகளின் வர்க்க குணாம்சத்தை விளங்கிக்கொண்டால், தமிழ்த் தலைவர்கள் அரசியல் தீர்வில் அக்கறை இல்லாதிருப்பதற்கான காரணம் புரியும். இக்கட்சிகள் எப்போதும் வலுசாரித் தலைமையைக் கொண்டவையாகவே இருந்தன. இடதுசாரிச் சிந்தனையாளருடன் ஒத்துப்போகக் கூடியவர்களான ஓரிருவர் இடைக்கிடை இக்கட்சிகளில் முக்கியத்துவம் பெற்றபோதிலும் கட்சியின் செல்வழியைத் தீர்மானிக்கும் தலைமை எப்போதும் வலதுசாரிகளையே கொண்டிருந்தது. இடதுசாரிகளையும் முற்போக்காளர்களையும் எந்தக் காலத்திலும் இத்தலைமை நட்பு சக்தியாக ஏற்றுக்கொண்டதில்லை. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இவர்கள் ஓரங்கட்டுவதற்கு இந்த மனோபாவமே காரணம். இனப்பிரச்சினையின் தீர்வைப் புறந்தள்ளும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதையும் இந்தப் பின்புலத்திலேயே பார்க்க வேண்டும்.

சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறுவதிலேயே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தங்கியுள்ளது. கணிசமான சிங்கள மக்களும் சர்வசன வாக்கெடுப்பில் ஆதரித்து வாக்களிக்கும் பட்சத்திலேயே அரசியல் தீர்வு நடைமுறைக்கு வரமுடியும்.



**இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தால் அன்றாட வாழ்வில் தமிழ் மக்கள் முகங்கொடுக்கின்ற உடனடிப் பிரச்சினைகள் தாமாக மறைந்துவிடலாம். ஆனால், தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினையைப் புறந்தள்ளிவிட்டு மற்றைய பிரச்சினைகளிலேயே கவனம் செலுத்துகின்றார்கள். தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூட மக்களை உணர்ச்சிவசப் படுத்தும் வகையில் உடனடிப் பிரச்சினைகள் பற்றியே ஆவேசமாகப் பேசுகின்றார்கள். கூட்டமைப்பின் மாகாண சபை நிர்வாகமும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்படுவதாக இல்லை. எனவேதான் தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வை ஏன் புறந்தள்ளுகின்றார்கள் என்ற கேள்வியைத் தமிழ் மக்கள் கேட்க வேண்டும்.**

சிங்கள மக்கள் மத்தியில் இடதுசாரி மற்றும் முற்போக்குச் சிந்தனைக்கு உட்பட்டவர்கள்தான் அரசியல் தீர்வுக்கு ஆதரவாக வாக்களிக்கக் கூடியவர்கள். இப்படியான சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்குத் தமிழ்த் தலைவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று அரசியல் தீர்வில் அக்கறை உள்ளவர்கள் பல தடவைகள் வலியுறுத்திக் கூறியபோதிலும் வலதுசாரித் தமிழ்த் தலைமை அதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக அமைந்த “எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு” அணியில் அங்கத்துவம் வகிப்பதில் காட்டுகின்ற ஆர்வம் இடதுசாரிகளையும் முற்போக்காளர்களையும் அணுகி இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதில் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இல்லை. பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்வதை எதிர்க்கும் ஊடகவியலாளர் மகாநாடுகளில் பங்குபற்ற முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை கூறிய பின்னரும் அக்கட்சியை ஆட்சியில் அமர்த்தும் முயற்சியைக் கைவிடக் கூட்டமைப்புத் தலைமை தயாராக இல்லை. இடதுசாரி எதிர்ப்பை முன்னிலைப்படுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வை இவர்கள் ஓரங்கட்டுவது தமிழ் மக்களின் பிரதான நலனுக்கு முற்று முழுதாக விரோதமான செயல்.

இடதுசாரி எதிர்ப்புக்காக இனப்பிரச்சினையின் தீர்வைத் தமிழ்த் தலைமை கைவிடுவது இது முதலாவது சந்தர்ப்பமல்ல. முன்னரும் இப்படி நடந்திருக்கின்றது. 1965இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கூடுதலான தொகுதிகளில் வெற்றியீட்டியபோதிலும் ஆட்சி அமைப்பதற்குப் போதுமான பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தனித்தனியாகத் தமிழரசுக் கட்சியின் உதவியை நாடின. பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதாகவும், சிம்மாசனப் பிரசங்கத்திலேயே அதைக் குறிப்பிடுவதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூறியது. மாவட்ட சபைகளை வழங்குவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியது. பண்டா-செல்வா ஒப்பந்தத்திலும் பார்க்க மிகவும் குறைவான அதிகாரங்களைக் கொண்ட மாவட்ட சபைக்காகத் தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தது. தமிழ் மக்களின் நலனை முன்னிலைப்படுத்திப் பார்த்திருந்தால் தமிழரசுக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையே ஆதரித்திருக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி தீர்மான சக்தியாக இல்லை. தமிழரசுக் கட்சி இல்லாமலும் நியமன உறுப்பினர்கள் ஆறு பேருடன் அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை இருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்திருந்தால் அந்த அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி தீர்மான சக்தியாக இருந்திருக்கும். தமிழரசுக் கட்சி வெளியேறினால் அரசாங்கம் வீழ்ந்துவிடும் நிலை. இந்தப் பலத்தைப் பயன்படுத்தி பண்டா - செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்க முடியும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தில் இடதுசாரிகளும் அங்கம் வகிப்பார்கள் என்பதாலேயே தமிழரசுக் கட்சித் தலைமை, கிடைத்த சந்தர்ப்பத்தைக் கைவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தது. இறுதியில் மாவட்ட சபையும் கிடைக்கவில்லை.

1970இல் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் முதலாவது குடியரசு அரசியலமைப்பைத் தயாரித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில், அந்த அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிரதான சரத்துகளை அரசியலமைப்பில் உள்ளடக்குவதாக அரசாங்கம் தமிழரசுக் கட்சித் தலைமைக்குத் தகவல் அனுப்பியது. அந்த வேண்டுகோளைத் தமிழரசுக் கட்சி ஏற்றிருந்தால் பிற்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் தோன்றியிருக்க மாட்டா. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இடதுசாரிகளும் அங்கம் வகித்ததாலேயே தமிழரசுக் கட்சி அந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிட்டது.

இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது எடுத்திருக்கும் நிலைப்பாடு இடதுசாரி மற்றும் முற்போக்கு எதிர்ப்பையே அடிப்படையாகக் கொண்டது. மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகவும் ஏற்க முடியாது என்று இவர்கள் கூறுவதை நிதானமாக ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை விளங்கும். மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்றால் கட்டங்கட்டமாக அரசியல் தீர்வை நோக்கிச் செல்லும் அணுகுமுறை சர்வசன வாக்கெடுப்புக்கு இட்டுச் செல்லும். அப்போது தென்னிலங்கையின் இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளை அணுக வேண்டி ஏற்படும். அதைத் தவிர்ப்பதற்காகவே மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்க மறுக்கின்றார்கள். இந்த உண்மையைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காகச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று போலியான நம்பிக்கையை வளர்க்கின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தருவதானால் அரசாங்கத்துக்கூடாகவே பெற்றுத் தர முடியும். அத்தீர்வு சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற வேண்டும். அப்போது தென்னிலங்கையின் இடதுசாரிகளையும் முற்போக்காளர்களையும் அணுக வேண்டி ஏற்படும். இவ்வளவும் கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியாமலில்லை. இனப்பிரச்சினையின் தீர்வில் இடதுசாரிகளையும் முற்போக்காளர்களையும் சம்பந்தப்படுத்தினால் அவர்களின் செல்வாக்கு அதிகரித்துவிடும் என்பதற்காகச் சர்வசன வாக்கெடுப்பைத் தவிர்க்க விரும்பும் கூட்டமைப்புத் தலைமை சர்வதேசம் தீர்வைப் பெற்றுத் தரும் எனக் கூறுவதன் நோக்கம் என்ன?

இனப்பிரச்சினையின் தீர்வில் சர்வதேச சமூகம் அக்கறை கொள்ளாது என்பதால் சர்வசன வாக்கெடுப்பு இடம்பெறாதென்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். அரசியல் தீர்வைத் திட்டமிட்டுப் புறந்தள்ளும் தங்கள் செயலைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளாதிருக்க வேண்டுமானால் சர்வதேச சமூகம் பற்றிய நம்பிக்கையை அவர்களிடம் தொடர்ச்சியாக வளர்க்க வேண்டும் என்பதும் கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும்.

வலதுசாரி நலனுக்காகத் தமிழ் மக்களுக்கு நிரந்தரமாகத் துரோகம்.

# உள்ளக விசாரணைக் குழுவை அவசரமாக அமைக்க முடிவு

## பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பில்



(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பின் மேற்பார்வையிலும் கண்காணிப்பின் கீழும் புதிய உள்ளக விசாரணைக்குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய பொதுநலவாயத்தின் மேற்பார்வையில் உள்நாட்டின் விசாரணைக்குழு ஒன்று அமைக கப்படும் என்று பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஸ் சர்மா தெரிவித்துள்ளார்.

அத்துடன், சித்திரவதைகளுக்கு எதிராக அமைக்கப்படும் உள்நாட்டு விசாரணைக் குழுவுக்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பு உதவிகளை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளின் அமர்வுக்காக கொழும்புக்கு புறப்பட முன்னர் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

சித்திரவதைகளுக்கு எதிரான இலங்கையின் விசாரணைக் குழு அந்த நாட்டின் மனித உரிமை ஆணைக்குழுவின் கீழ் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அதனை பொதுநலவாய அமைப்பு மேற்பார்வை செய்வதுடன் அதற்கான உதவிகளை வழங்கும் என்று கமலேஸ் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குழு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டதாக கூறப்படும் யுத்தத்துக்கு அனைத்துவித குற்றச்செயல்கள் தொடர்பாகவும் விசாரணைகளை மேற்கொள்ளும் என்று சர்மா தெரிவித்துள்ளார். இந்தக் குழு 18 மாதங்களுக்குள் தமது பணியை முடிக்கும் வகையில் இந்த விசாரணைக்குழுவின் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படும் என்றும் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

# நடுத்தெருவில் இலங்கையர்கள் எடுக்கப்படுமா நடவடிக்கை?

(கொழும்பு)

சவுதி அரேபியாவின் தமாம் பகுதியில் 400 இற்கும் அதிகமான இலங்கைப் பணியாளர்கள் குடிவரவு குடியகல்வு அலுவலகம் முன்பாக தங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு திரும்பும் எதிர்ப்பார்ப்புடன் கடந்த பத்து நாட்களாக அந்த இடத்தில் தங்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சவுதி அரேபிய அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட போது மன்னிப்புக் காலத்தினுள் தம்மால் நாடு திரும்ப முடியவில்லை எனவும் மேற்படி இலங்கையர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உணவுத் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக பாரிய சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் தமாமில் தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொது முகாமையாளருமான மங்கல ரந்தெனியவிடம் வினவியது.

சவுதி அரேபிய அரசாங்கத்தின் பொதுவான சட்டதிட்டங்களுக்கு அமைவாக இலங்கையர்களை நாட்டிற்கு வரவழைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.சி.ஆர்.சி.பணிகளை நிறுத்த உத்தரவிட்டது யார்?

## விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல்



(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளை முடிவுறுத்திக் கொள்ளுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உத்தரவிட்டதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைப் பணிகளை முடிவுறுத்திக் கொள்ளுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ நேரடியாகவே அறிவுறுத்தல் விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முரண்பாட்டு நிலைமைகளின் போது மனிதாபிமான உதவி வழங்கும் பணிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டதாகவும், தற்போது முரண்பாட்டு நிலைமை முடிவுற்றிருப்பதாகவும் கோத்தாபய தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவிற்கான அமெரிக்கத் தூதுவர் க்ளைன்ட் வில்லியம்ஸினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தென் ஆசிய வலயப் பிராந்திய பொறுப்பாளர் ஜெக்யூ டி மாயோ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான பணிகளுக்கு வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கை அரசாங்கத்தின் ஏனைய தரப்பினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

# பதவி விலகினார் கல்முனை மேயர்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர மேயர் மீராசாகிபு சிராஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவரது இராஜினாமாவையடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு தற்போதைய துணை மேயர் நிசாம் காரியப்பர் நியமிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

மேயர் பதவியிலிருந்த மீராசாகிபு சிராஸ் இராஜினாமா செய்ததையடுத்து கல்முனை மாநகர மேயர் பதவியை சுழற்சி அடிப்படையில் வழங்குவது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் கடந்த மூன்று வாரங்களாக காணப்பட்ட இழுபறிநிலை முடிவுக்கு வந்துள்ளது.

மீராசாகிபு சிராஸ் தனது பதவி விலகல் கடிதத்தை கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து கையளித்துள்ளார். 2011 ஆம் ஆண்டு நவம்பரில் நடை பெற்ற கல்முனை மாநகரசபை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றிக்கொண்டது.

4 வருட பதவிக்காலத்தில் இவருக்கு சுழற்சி அடிப்படையில் மேயர் பதவி வழங்கப்பட்டது.

முதல் இரண்டு வருட பதவிக்காலம் பூர்த்தியடைந்த நிலையில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த 31 ஆம் திகதிக்கு முன்னதாக மீராசாகிபுவை இராஜினாமா செய்யுமாறு கேட்டிருந்தார்.

ஆனால் மீராசாகிபு சிராஸ் சில காரணங்களை முன்வைத்து பதவி விலக மறுத்து வந்த நிலையிலே இந்தப் பதவி தொடர்பாக கட்சிக்குள் இழுபறி நிலை ஏற்பட்டது.

# அதிநவீன ஹோட்டேல் தெற்கில் நிர்மாணிக்க திட்டம்

## ஸ்பெயின் நிறுவனம் முதலீடு



(கொழும்பு)

மத்தள மகிந்த ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையம், தெற்கு அதிவேக பாதை ஆகியவற்றை கேந்திரப்படுத்தி அவுங் கலையில் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் ஹோட்டலொன்றை நிர்மாணிப்பதற்கு எயிட்கன்ஸ் ஸ்பென்ஸ் நிறுவனம் ரியூ ஸ்பெயினுடன் கைகோர்த்துள்ளது.

ஏழு மாடிகளைக் கொண்ட இந்த சுற்றுலா ஹோட்டலில் 500 அறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஸ்பெயினை தளமாக கொண்ட ரியூ ஹோட்டலினால் இதன் முகாமைத்துவம் முன்னெடுக்கப்படவுள்ளது. மேலும் 16 நாடுகளில் ரியூ ஹோட்டல்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனம் ஆசிய பசுபிக் வலயத்தில் இத்தகைய நடவடிக்கையொன்றில் ஈடுபடும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இந்த ஹோட்டலை நிர்மாணிப்பது காலத்தின் தேவையாகும். தெற்கு அதிவேக பாதை அம்பாந்தோட்டை வரை நீடிக்கப்படவுள்ளதால் இது முக்கியமானது. அத்துடன் மத்தள சர்வதேச விமான நிலையம் அமைந்திருப்பதும் இந்த ஹோட்டலை அமைப்பதற்கு காரணம். நாட்டின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதை எப்போதுமே எயிட்கன்ஸ் ஸ்பென்ஸ் நிறுவனம் ஊக்குவிக்கும். அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கான ஒத்துழைப்பை வழங்குவ்தே எமது முதலீடுகளின் நோக்கமாகும்" என நிறுவனத்தின் பிரதித் தலைவர் ராஜன் பிறிட்டோ தெரிவித்தார்.

# கணனி உற்பத்தி நிலையம் திறந்து வைத்தார் மகிந்த

(கொழும்பு)

அம்பாந்தோட்டை சூரியவெவ என்ற இடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நாட்டின் முதலாவது கணனி உற்பத்தி தொழிற்சாலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை திறந்துவைத்தார்.

ஆசியாவின் தொழில்நுட்ப மத்திய நிலையமாக இலங்கையை மாற்றும் தேசிய திட்டத்தின்கீழ் "ஈ விஸ்" என்ற பெயரில் இந்த கணனி உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இத் திறப்பு விழா வைபவத்தில் அமைச்சர்களான பந்துல குணவர்தன - ராஜித சேனாரத்ன- லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன - ரஞ்சித் சியம்பலாப் பிடிய- மகிந்த அமர வீர- மத்திய மாகாண அமைச்சர் சரத் ஏக்கநாயக்க- ஊவா மாகாண முதலமைச்சர் 'சீந்திர ராஜபக்ஷ - மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ- சஜித்வாஸ் குணரத்ன- "ஈ விஸ்" நிறுவனத்தின் தலைவர் சஞ்சீவ விக்ரமநாயகக ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.






கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது மாணவன் ஒருவன் விருந்தினருக்கு கைலாகு கொடுத்து வரவேற்பதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும், விருந்தினர் ஒருவர் உரையாற்றுவதையும், அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (51)

# 20 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா யாழில் காசோலை மோசடி

## பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரத்தில் 20 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா காசோலை மோசடி சம்பவங்கள் யாழ். மாவட்டத்தில் நடைபெற்றிருப்பதாக யாழ்.சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இத்தகவல்களை வெளியிட்டார். அங்கு அவர் மேலும் தகவல் தருகையில் யாழ்.மாட்டின் வீதியில் நடைபெற்ற 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலை மோசடி சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் கடந்த மாதம் 31ஆம் திகதி முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது

சந்தேக நபர் சுன்னாகத்தைச் சேர்ந்தவர் எனவும் இவர் கைது செய்யப்பட்டு நிதிமன்றத்தில் பாராப்படுத்தப்பட்டதனை அடுத்து அவர் பத்தாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த மூன்றாம் திகதி அம்மன் வீதி கொக்குவில் பகுதியில் மூன்று இலட்சத்து 30 ஆயிரம் ரூபா காசோலை மோசடி சம்பவம் ஒன்று மானிப்பாய் பொலிஸ் பிரிவில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரித்த அவர் சந்தேக நபர் மானிப்பாயைச் சேர்ந்தவர் எனவும் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாராப்படுத்தப்பட்டதனை அடுத்து பத்தாயிரம் ரூபா சீரப்பிணையில விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வல்வெட்டித்துறைப் பகுதியில் நடைபெற்ற மற்றுமொரு சம்பவத்தில் ஆறு இலட்சம் ரூபா காசோலை மோசடி சம்பவம் ஒன்று பதிவாகியிருப்பதாகவும் தெரிவித்த சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தேக நபர் கடந்த 31ஆம் திகதி வல்வெட்டித்துறையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதுடன் அவர் நீதிமன்றத்தால் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளார்.

இதேவேளை அச்சுவேலி பொலிஸ் பிரிவில் 7 இலட்சம் ரூபா காசோலை மோசடி சம்பவம் ஒன்று கடந்த வாரம் பதிவாகியிருப்பதாகவும் தெரிவித்த அவர் முறைப்பாட்டுக்காரர் சுன்னாகத்தைச் சேர்ந்தவர் எனவும் சந்தேகநபர் கைது செய்யப்படவில்லை அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

# தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்வரும் கற்கைநெறிகளை எதிர்வரும் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், நல்லூர், சண்டிலிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளது.

கற்கை நெறிகளாக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், கணினி வன்பொருள் திருத்துனர், கட்டட நிர்மாண உதவியாளர், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் திருத்துனர், வீட்டு மின்னிணைப்பாளர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துனர், காய்ச்சி இணைப்பவர்(வெல்டிங்), ஆடை வடிவமைப்பாளர், அழகுக்கலை வல்லுனர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துனர், குளிர்சாதன உபகரண திருத்துனர், விவசாய உபகரண திருத்துனர், மின் மோட்டர் வைண்டிங், கணினி பட வடிவமைப்பாளர், நீர்க் குழாய் பொருத்துனர் போன்றனவாகும். இவ்வனைத்து கற்கைநெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கை நெறிகளில் இணைய விரும்புவர்கள் தங்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (தொ.பே: 021 222 7949) அல்லது ஏதாவது எமது பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்பிக்குமாறு இலங்கை கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

# மாதாந்த உதவி கொடுப்பனவு

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் வசிக்கும் நலிவுற்றோர் மற்றும் விதவைகளுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவிப்பணம் மார்கழி மாத கொடுப்பனவு எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது.

இத்திகதிக்குள் பெற்றுக் கொள்ளாத பணம் திரும்பப்பெற்றுக் கொள்ள முடியாது என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (150)

# கட்டாக்காலிகளால் நெற் பயிர்கள் நாசம்

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் உள்ள கரம்பைக் குறிச்சி மேற்குப் பகுதியில் உள்ள (மேற்கு வெளி) வயல் நிலங்களில் கட்டாக்காலிகள் தொல்லையால் அப்பகுதி வயல் நிலங்களில் நெற்பயிர்கள் அழிவடைந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலிகளின் தொல்லையை நிறுத்த உடனடியாக கமக்கார அமைப்புக்கள் முன்வர வேண்டுமென அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

# சுவருடன் மோதி மாணவன் காயம்

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் மாணவன் ஒருவரின் தலை சுவருடன் மோதுண்டு அவர் அதிர்ச்சிக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். தொல்புரத்தைச் சேர்ந்த எஸ்.தபரூபன் (வயது - 13) என்ற மாணவனே இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் நடை பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, பாடசாலையில குறித்த மாணவனுக்கும் பிறிதொரு மாணவனுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் முரன்பாடு ஏற்படவே அது சண்டையாக உருவெடுத்ததன் காரணமாக குறித்த மாணவன் பாடசாலைக் கட்டடமொன்றின் சுவரில் தலைப்பகுதி அடிபட்டு காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச்சம்வம் காரணமாக குறித்த மாணவனின் கதை மாறாட்டமாகக் காணப்பட்டதனை அடுத்து பாடசாலை நிர்வாகத்தினால் பெற்றோருக்கு தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்தே குறித்த மாணவன் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# விண்ணப்பம் கோரல்

தீவகக்கல்வி வலயத்தில் தமிழ் பாடத்திற்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இவ்வெற்றிடத்திற்கு தீவகக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, 2-I யைச் சேர்ந்த ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியுமெனவும் விண்ணப்பதாரிகள் வடமாகாண கல்வி அமைச்சின் 2008/03 சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை பூர்த்திசெய்தவராகவும் இருத்தல் வேண்டும் எனவும் தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, 2-I இனைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் தீவகக் கல்வி வலயத்திற்கு வெளியேயுள்ள இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, 2-Iஇனைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும். விண்ணப்பங்களை தீவகக்கல்வி வலயத்தில் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தீவகக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

# முரசின் இன்றைய பலன்



[10.11.2013 ஞாயிற்றுக்கிழமை]

விஜய வருஷம் ஐப்பசி மாதம் 24 ஆம் திகதி.
திருவோண நட்சத்திரம் பி.ப. 02.31 வரை
பின் அவிட்டம். அஷ்டமி/அமிர்தம்.
இராகுகாலம் 04.35 - 06.05 வரை. சுபநேரம் 09.05 - 10.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** கிடைத்த வாய்ப்பினை பயன்படுத்துவதினால் வெற்றியாளராக மாறலாம், அதி கூடிய விலையில் பொருள் விற்பனை செய்தமையினால் அபராதம் விதித்தல்.

**ரிஷபம்** காணியின் உரிமம் பெற்றுக் கொள்ளாமையால் வீட்டுத்திட்ட உதவிகளைப் பெற முடியாத நிலை உருவாதல், பொறுப்பற்ற விதத்தில் நடக்கும் ஊழியர்களினால் மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படல்.

**மிதுனம்** குற்றம் புரிந்து விட்டு காவல் துறைக்கு டிமிக்கி கொடுத்தவர் கைதாகல், வீட்டுத்திட்டத்தைப் பெறுவதற்காக அரச காணிகளைத்தருமாறு கோரிக்கை விடுத்தல்.

**கடகம்** ஏற்பாடு செய்த நிகழ்வு காலநிலையால் கைவிடப்படல், உபகரணங்கள் வழங் கப்பட்டதால் தொழிலில் புதிய உத்வேகம் பிறத்தல்.

**சிம்மம்** உழைப்புத்தான் புதையல் என நினைத்ததால் காரியத்தில் வாகை சூடல், ஏற்கனவே வழங்கிய கடனை ஒழுங்காகச் செலுத்தாமையால் மீண்டும் கடன் பெற முடியாது திண்டாட்டம்.

**கன்னி** அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட பிரஜைகள் குழுவில அங்கத்தவராக தெரிவு செய்யப்படல், மூளையின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டு பக்கவாத நோய் ஏற்படுமா எனப் பயப்பிராந்தியம்.

**துலாம்** பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் கிடைக்காமையால் அங்கலாய்த்தல், இடமாற்றம் பெற விண்ணப்பித்தபோதிலும் நிராகரிக்கப்பட்டதால் கவலை.

**விருச்சிகம்** ஆயுர்வேத வைத்தியர்கள் ஆங்கில மருந்துகள் பயன்படுத்தியமையினால் சட்ட நடவழக்கை எடுத்தல், கட்டாக்காலி நாய்களால் போக்குவரத்துச் செய்வதில் அச்ச உணர்வு.

**தனுசு** பிரச்சினையை சுமுகமாக அணுகியமையினால் முரண்பாடு அற்றுப்போதல், மனைவியிள் ஆலோசனையால் காரியஜெயம்.

**மகரம்** சந்தேகப்பேய் ஆட்கொண்டதால் நல்லவர்களை இழக்க வேண்டிநேரிடும், பிறர் விடயங்களில் தலையிடாது இருந்ததால் பிரச்சினைகள் வராதுவிடல்

**கும்பம்** மனதில் உதித்த நல்எண்ணத்தைச் செயற்படுத்தி காரியசித்தி அடைதல், இழுத்தடித்துக் கொண்டிருந்த காரியமொன்று இனிதான முடிவுக்கு வருதல்.

**மீனம்** ஆளை எடைபோட்டதால் நன்மை செய்யப் பின்னடித்தல், கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத நிலையால் கவலைப்படல்.

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா




(அபுதாபி)

ஸ்ரெனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் தென்னாபிரிக்க அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றிக்கொண்டது.

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி நேற்று முன்தினம் அபுதாபியில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி, டு கொக்கின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டி கொக் ஒரு சிக்ஸர், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 112, அம்லா 46, டி வில்லியர்ஸ் 30, டுமினி 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யுனைட்கான், மொகமட் ஹபீஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 267 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஸ்ரெனின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஆனால், கப்டன் மிஸ்பா உல் ஹக் ஒரு முனையில் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தபோதும், மறுமுனையில் அவருக்கு ஒத்துழைக்கும் வகையில் எவரும் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஆடவில்லை. இறுதியில் பாகிஸ்தான் அணி 49.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 65, சொகைப் மகூட் 56 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட ஸ்ரென் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை ஒரு ஆட்டம் மீதமுள்ள நிலையில் தென்னாபிரிக்க அணி 3-1 என்ற கணக்கில் கைப்பற்றிக்கொண்டது.




## ஒரு நாள் தொடர் இன்று ஆரம்பம்

(அம்பாந்தோட்டை)

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொர்டரின் முதல் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.

பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தை முடித்த கையோடு இலங்கைக்கான கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் கொழும்பை வந்தடைந்தது. இதில் இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு ருவென்ரி-20 மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் இன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு அம்பாந்தோட்டையில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ், வீரர்கள் அனைவரும் சிறந்த ஆட்டத் திறனுடன் இருப்பதாலும், உள்ளூரில் போட்டிகளில் இடம்பெறவுற்றதாலும் தொடரைக் கைப்பற்றிக்கொள்ளக்கூடிய அதிக வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்தார்.

## கொழும்பில் 3ஆவது ஆசிய கூடைப்பந்து

(கொழும்பு)

சர்வதேச கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 3ஆவது ஆசிய கூடைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை கொழும்பில் இடம் பெறவுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் 12 ஆசிய நாடுகள் பங்கேற்கின்றன.

60ஆவது வருட கால கூடைபந்தாட்ட வரலாற்றைக் கொண்ட இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் ஒரு சர்வதேச போட்டியை இலங்கையில் நடத்துவது இதுவே முதல் தடவையாகும். இப்போட்டிகள் 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கிடையில் இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு இடம்பெறவுள்ள பயிற்சிப் போட்டியில் கலந்து கொள்ளும் நோக்குடன் இலங்கை மகளிர் கனிஷ்ட கூடைப்பந்தாட்ட அணி கடந்த 6ஆம் திகதி மலேசியா பயணமானது. மலேசியாவிற்கு பயிற்சிப் போட்டிக்காக சென்ற இலங்கை அணி எதிர்வரும் 11ஆம் திகதி நாடு திரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டெஸ்டில் நாங்கள் சிறந்த அணி

(சிட்னி)

உலக டெஸ்ட் அரங்கில் வலுவான அணியாக நாங்களே தற்போது சிறந்து விளங்குகின்றோம். துடுப்பாட்டம் பந்து வீச்சு, களத்தடுப்பு என எல்லா வகையிலும் எமது வீரர்கள் சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக தாயகத்தில் இடம்பெற்ற ஆஷஸ் தொடரை வெல்ல முடிந்தது. அதேபோன்று அவுஸ்ரேலியாவில் இடம் பெறவுள்ள ஆஷஸ் தொடரையும் வெல்வோம் என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்துள்ளார். இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தா டெஸ்ட் துளிகள்...

(கொல்கத்தா)

கொல்கத்தாவில் தனது கடைசி டெஸ்ட் போட்டியை விளையாடிய சச்சின் டெண்டுல்கருக்கு மேற்கு வங்க கிரிக்கெட் சபை சார்பாக பல்வேறு நினைவுப் பரிசுகள் வழங்கி பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. தமது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள சச்சின் மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு எதிராக நடைபெற்று வரும் கடைசி டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறார். ஈடன் கார்டன் மைதானத்தில் இதுவரை பல்வேறு போட்டிகளில் ஆடியுள்ள சச்சினுக்கு அங்கு ஆடிய 199ஆவது டெஸ்ட் போட்டியே கடைசிப் போட்டியாகும்.


இப்போட்டியை வெற்றியுடன் முடித்து சச்சினுக்கு சமர்ப்பணம் செய்ய நினைத்ததை இந்திய அணி வீரர்கள் நினைவாக்கியுள்ளனர். இந்த வெற்றிக்கு பின் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி சச்சினை கௌரவிக்கும் வகையில் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இதை தொடர்ந்து தங்க ஜரிகை தலைப்பாகையை சச்சினுக்கு கங்குலி அணிவித்து கட்டித் தழுவி வாழ்த்தினார்.



டெஸ்ட் போட்டிகளில் நல்ல சாதகமான நிலையை போராடிப் பெற்ற பின்னர் அதை வீணடிப்பது எங்களுக்கு வாடிக்கையாகிவிட்டது. இந்தியா ஆடியபோது கூட, தொடக்கத்தில் விக்கெட்டுகளைக் கைப்பற்றி கடும் நெருக்கடி கொடுத்தோம். ஆனால், அதன் பின்னர் பெரிய இணைப்பாட்டம் அமைய வாய்ப்பு கொடுத்தது தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது. 60, 70 ஓவர்களில் ஆட்டமிழப்பது எந்த வகையிலும் வெற்றிக்கு உதவாது. குறைந்தபட்சம் 120 ஓவர் வரை தாக்குப்பிடிக்க வேண்டும் என நினைத்தோம். அது நடக்கவில்லை. ஸ்லிங்போர்ட் அபாரமாகப் பந்துவீசினார். தொடர்ச்சியாக 50 ஓவர் போடுவது என்பது சாதாரண காரியம் இல்லை. நான் உட்பட மற்ற பந்துவீச்சாளர்களும் அவருக்கு போதிய ஒத்துழைப்பு கொடுப்பது அவசியம். அடுத்து மும்பை டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாட முயற்சிப்போம்.

**மேற்கிந்தியத்தீவுகள் அணி கப்டன் சமி**



அற்புதமாக விளையாடினோம். இரண்டாவது நாளில் ஆடியது மிகவும் கடினமாக இருந்தது. அதன் பின்னர் களத்தின் தன்மை மாறி விட்டது. எங்கள் பந்துவீச்சாளர்கள் துல்லியமாகப் பந்துவீசி வெற்றியை வசப்படுத்திவிட்டனர். குறிப்பாக, சமி மிக சிறப்பாகப் பந்துவீசினார். நல்ல வேகத்துடன் ரிவர்ஸ் ஸ்விங் பந்துவீச்சில் மேற்கிந்தயத்தீவுகள் துடுப்பாட்ட வீரர்களைத் திணறடித்து விக்கெட்டுகளை வீழ்த்தினார். சரியான அளவில் பந்துவீசியதால் தான் அவரால் ஒன்பது விக்கெட்டுக்களைக் கைப்பற்ற முடிந்தது. பந்து நன்றாக எகிறி வரக்கூடிய ஆடுகளத்தில் அவரால் இரண்டு பக்கமாகவும் பந்தை ஸ்விங் செய்ய முடியும் என நம்புகிறேன். ரோகித் மிகவும் திறமையான வீரர். அதை களத்திலும் நிரூபித்திருக்கிறார்.

**இந்திய அணி கப்டன் டோனி.**



டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் இடம் பிடிப்பதற்காக இத்தனை காலம் காத்திருந்தது வீண் போகவில்லை. இதை விட சிறந்த அறிமுகம் எனக்கு கிடைத்திருக்கமுடியாது. இந்தப் போட்டியை என்றைக்கும் மறக்கமாட்டேன். அஸ்வினுடன் இணைந்து சேர்த்த ஓட்டங்கள் அணியின் வெற்றிக்கு உதவியது மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கள் இணைப்பாட்டம் மிக முக்கியமானது என்பதை உணர்ந்திருந்தோம். ஆடுகளம் ஓட்டங்களைக் குவிக்க முழுமையாகஒத்துழைக்காவிட்டாலும், சரியான பந்துக்காக காத்திருந்து அடித்து விளையாடினோம். ஈடன் கார்டன் மைதானத்தில் விளையாடியது அற்புதமான அனுபவம். இரசிகர்களின் ஆதரவுக்கு நன்றி.


**ஆட்ட நாயகன் ரோகித் சர்மா**



அணியின் வெற்றியில் எனது பங்கும் இருந்தமை மகிழ்ச்சி அளிக்கின்றது. அறிமுக டெஸ்ட் போட்டி என்பதால் முதல் இனிங்ஸில் சற்றுப் பதற்றம் இருந்தது. இருப்பினும் சக வீரர்கள், கப்டன் டோனி ஆகியோர் என்னை உற்சாகப்படுத்தினர். இது போன்ற அறிமுகம் வேறு எந்த வீரருக்கும் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருடன் விளையாடும் வாய்ப்பு கிடைத்தமை நான் செய்த பாக்கியங்களில் ஒன்று. அவருடன் அதிக போட்டிகளில் இணைந்து விளையாட வேண்டும் என்று எண்ணினேன். அது இனி கைகூடாது. இந்திய அணிக்காக அதிக போட்டிகளில் பங்குபற்ற வேண்டும் என்பது எனது இலக்கு. தொடர்ந்து சிறப்பாகப் பந்து வீசி அணியில் நிரந்தர இடத்தை தக்கவைப்பதே எனது தற்போதைய இலக்கு. மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான மும்பை டெஸ்ட் போட்டியையும் வெல்ல முடியும் என்று நம்புகின்றோம்.

**வேகப்பந்து வீச்சாளர் மொகமட் சமி**






கிண்ணம் வழங்கப்படுவதையும், வெற்றிக் களிப்பை வெளிப்படுத்தும் யூத் அணியையும் காணலாம்

# அமரர் குருநாத் மென்பந்து கிரிக்கெட் கிண்ணம் வென்றது இணுவில் யூத்

(மானிப்பாய் 48)

அமரர் குருநாத் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை இணுவில் யூத் அணி கைப்பற்றிக்கொண்டது.

தீபாவளியை முன்னிட்டு அழைக்கப்பட்ட ஆறுஅணிகள் கலந்து கொண்ட அமரர் குருநாத் ஞாபகார்தமாக 8 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடர் கடந்த வாரம் நந்தாவில் அம்மன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

பல அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் அரையிறுதிக்கு நந்தாவில் அம்மன், இணுவில் யூத், சிந்மயபாரதி, ஆர்.வீ. அணிகள் தகுதி பெற்றன.

இதில் முதலாவது அரையிறுதியில் நந்தாவில் அம்மன் அணியை வென்று இணுவில் யூத் அணியும், சிந்மயபாரதி அணியை வென்று ஆர்.வீ அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

இறுதிப் போட்டியின் நாணயற் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இணுவில் யூத் அணி கோகுலனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இணுவில் யூத் அணி நிர்ணயிக்கப்பட்ட எட்டு ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோகுலன் ஏழு சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் தனலக்ஷன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 99 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஆர்.வீ. அணி நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 66 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் லிங்கம் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மதன், கோகுலன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக இணுவில் யூத் அணியின் கோகுலன் தெரிவானார்.

இவ் நிகழ்வின் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், தாவடி சிவசக்தி சனசமூக நிலைய முன்னாள் தலைவர் சிவநாதன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிக்கான கிண்ணம் உட்பட்ட பரிசில்களை வழங்கி வைத்தனர். (48)

விளையாட்டு செய்திகள்

## இன்று இறுதிப் போட்டி

(மன்னார்)

மன்னார் இலகடிப்பிட்டி சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்று மணற்குளம் இலகடிப்பிட்டி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இப்போட்டித் தொடரில் பிரதேசத்திற்குட்பட்ட பல அணிகள் பங்குபற்றியதாகவும், நேற்று முதல் சுற்று ஆட்டங்கள் இடம்பெற்றதாகவும், இன்றைய தினம் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி இடம்பெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும், பணப் பரிசில்களும் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## துடுப்பாட்ட பயிற்றுநரை நியமிக்க நடவடிக்கை

பாகிஸ்தானின் கிரிக்கட் அணிக்கான துடுப்பாட்ட பயிற்சியாளர் ஒருவரை புதிதாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட திறன் தற்போது மோசமடைந்துள்ள நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அடுத்த மாதம் இந்தியாவுக்கும், பின்னர் தென்னாபிரிக்காவுக்கும் சுற்றுத் தொடர்களில் பங்கேற்கவுள்ள நிலையில், புதிய துடுப்பாட்ட பயிற்சியாளரை நியமிக்க துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் முன்னாள் வீரர்களில் ஒருவரை நியமித்தால் உணர்வுடன் செயற்படக்கூடிய வாய்ப்புகள் நிறையவே இருக்கும் எனவும், அவர்கள் உண்மையாக உழைப்பார்கள் எனவும் கருதுவதால் பெரும்பாலும் முன்னாள் வீரர்களில் ஒருவரை இப்பதவியில் அமர்ந்த கிரிக்கெட் சபை விரும்புவதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

## வலைப்பாடு ஜெயமீட்பர் சம்பியன்

(உருத்திரபுரம்)



உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வலைப்பாடு ஜெயமீட்பர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடர் நடாத்தப்பட்டது.

இதன் முதலாவது அரையிறுதிப் போட்டியில் கிளிநொச்சி திருநகர் அணியும் வலைப்பாடு ஜெயமீட்பர் அணியும் மோதின. இதில் ஜெகமீட்பர் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியும், ஊரெழு றோயல் அணி யும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது ஆட்டத் திறனை வெளிப்படுத்தின. இதனால் இப்போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் நிறைவுபெற்றது. தொடர்ந்து தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஊரெழு றோயல் அணி 7-6 என்ற கோல் கணக்கில்




வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இந்நிலையில் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஊரெழு றோயல் அணியும், வலைப்பாடு ஜெயமீட்பர் அணியும் மோதின. சமபலம் கொண்ட இந்த இரு அணிகளும் மோதிய இப்போட்டி விறுவிறுப்புக்கும் பரபரப்பிற்கும் பஞ்சமில்லாத வகையில் இருந்தது. இரு அணிகளுக்கும் கோல் போடும் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தபோதும் இதனை கோலாக்கிக் கொள்ளத் தவறிவிட்டனர். இருப்பினும் ஜெயமீட்பர் அணி முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வர இரண்டு நிமிடங்கள் இருக்கையில் ஒரு கோலைப் போட்டுக் கொண்டது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி கோல் அடிக்க பல முயற்சிகளை மேற்கொண்டபோது ஜெயமீட்பர் அணியின் தடுப்பாட்ட யுக்தியினால் அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டது. இறுதியில் ஜெயமீட்பர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடரின் ஆட்டநாயகனாக றோயல் அணியின் கஜகோபன் தெரிவானார். இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.





ஈவினை மத்தி கற்பக விநாயகர் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு போட்டி அண்மையில் வெகுசிறப்பாக் நடைபெற்றுள்ளது. இதில் சிறார்களின் வண்ணமயமான விளையாட்டு நிகழ்வுகள் பல இடம்பெற்றன. போட்டியில் பங்குபற்றிய அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இப்போட்டி நிகழ்வில் வடக்குமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பியின் வலி• தெற்கு இணைப்பாளர் வலன்ரைன், வலி• தெற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அரிகரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், சிறார்கள் சித்திரம் வரைவதையும் காணலாம்.

# புலமைப் …

# வெற்றியீட்டிய மாணவர் …













யோகலிங்கம் கோபிதா
மனோகரன் பவித்திரன்
சுதாகஸ்கரன் சுவர்சனா
கேதீஸ்வரன் கிசேரன்
அற்புதானந்தம் அலெக்ஸ்
ஜெகநாதன் அனோஜன்
ஸ்ரீதரன் பவித்திரன்
விஜயகுமார் சங்கீதா
தியாகலிங்கம் சஞ்சீவனா
விநாயகமூர்த்தி டிலெக்சன
றொபேட் வின்சன் அபிநயா
விஜயரட்ணம் யோகடிலக்சிகா
குணாநன்தன் அபின்சன்

கருணானந்தன் தாருகாணன்
றொபேட் மேரி றொபேட்சனா
திரவியரட்ணம் அபிராம்
விக்னேஸ்வரன் சிபானுகன்
நாகலிங்கம் பிரதாபன்
உதயகுமார் சுரெனுகா
சண்முகராசா லாவன்யா
சாந்தகுமார் சங்கீவன்
புஸ்பராசா கலைக்கீரன்
ஜெகதீஸ்வரன் கம்சாயினி
லிங்கமுத்து சங்கமன்
பரமசிவம் சாம்பவி
தேவநேரன் அங்கவை

தர்மராஜசிங்கம் லுகிர்தா
ஜெனிகலிஸ்ரஸ் பிறட்றிக் கனிஸ்ரலா
திவ்வியதீசன் தர்சிஜன்
லிபோஸ்மோ வின்றோமின் பானுஷா
ஜோதீஸ்வரன் திலையா
வசந்தகுமார் அபிராம்
பாலச்சந்திரன் கஜீபன்
சபேஸ் ஜானுகா
விக்னேஸ்வரன் றக்சிகா
யோகநாதன் தசனிகா
காளியப்பன் தமிழ்மாறன்
செல்வராசா ஜெரட் நிருஷா
டனீந்திரகுமார் சுஸ்மிதா

லோகநாதன் டனுரட்சன்
யுலியன் ஜினோசியா
சசிக்குமார் கலையரசன்
பாஸ்கரன் எழில்சாந்
முருகேஸ்வரன் தூயவன்
ரவீந்திரன் லினுர்சன்
குகதாசன் தனுர்ஜன்
ஜெயக்காந்த் கோபிதருன்
ஜெயசிறீ பகீசன்
பாவேச்திரன் பவித்திரன்
கிளைமென்ற் ஜாகத்
தியாகராஜ் லோசன்
முரகமூர்த்தி கஜனிதரன்

ஜோன்சன் துவாரகா
றயல் றெஜினோட் டனுசன்
தெய்வேந்திரன் அருள்வெட்சி
ஆறுமகம் புவனலோஜினி
குமார் கவிஷா
சதீஸ்குமார் சுபா
மகாலிங்கம் திருமாறன்
நடராசா சுலக்சன்
வடிவேல் சிந்துஜா
நிமலச்சந்திரன் நிவேதா
கந்தசாமி நக்கீரன்
சிறீபத்மராசா தமிழருவி
திருப்புகழ் குமாரன் பவிஸ்ரா

லோகேந்திரன் கீர்த்தனா
ரூபன் தனோஜன்
கேதீஸ்வரன் டர்சனா
பாலகுமாரன் சகினா
சுரெஸ்வரன் கவினா
பாலகிருஷ்ணன் தனுசிகா
சுபாதரன் லதுர்சன்
இராசேந்திரம் சுகந்திரா
கனகசபை சரண்சி
குகெந்திரன் ஜனார்த்தனன்
இராஜேஸ்வரன் சுஜிந்தன்
வையகுருநா-தன் தாமிரா
சார்ள்ஸ் டெய்சி ஜெசாளினி

# ப் பரிசில் பரீட்சை - 2013, கிளிநொச்சி மாவட்டம்

# ர்களுக்கான கௌரவிப்பு விழா







- இலக்கினை அடைந்த இம் மாணவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.
- இம் மாணவர்களின் வெற்றிக்காக தொடர்ச்சியாக முன்னோடிப் பரீட்சைகளை நடாத்துவதற்கும், வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு தலா 3,000 ரூபா வீதம் தனது பிரத்தியேக நிதியிலிருந்து தந்துதவியமைக்காகவும் எமது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
- இந்த மாணவர்களின் வெற்றிக்காக உழைத்த ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் பூரண ஒத்துழைப்பினை வழங்கிய வலயக்கல்விப் பணிமனையினருக்கும் எமது நன்றிகள்.
- வெற்றியீட்டிய இம் மாணவர் ஒவ்வொருவருக்கும் 1000 ரூபா வீதம் வழங்கிய சம்பத் வங்கியினருக்கும் எமது நன்றிகள்.
- எம் அழியாச் செல்வம் கல்வியில் தொடர்ந்தும் வீறு நடை போடுவதற்கு என்றும் எம் வாழ்த்துகள்.

**மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழு**
**கிளிநொச்சி**









| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யூட் ...வண்ண ...குலதர்சன | திருமுரளி பானுசன் | சத்தியமூர்த்தி சுரதி | கமலன் மேதகஜன் | சண்முகம் மாதுலன் | விஜயகுமார் சவரிகா | கேதீஸ்வரன் அபியுதா | மகேந்திரன் லக்சனா | வினோதரன் லோஜிகா | இராஜேந்திரன் யுவராஜினி | சிவஞானம் தேனிலவன் | மதியழகன் ஆதவன் | செந்தில்வேலர் அபிசாயினி | காந்தரூபன் லுகெந்தினி |



| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ...ருஸ்ணகுமார் தர்சிகா | கௌரீசன் தமிழிசை | ஞானச்சந்திரன் கவிசாலினி | விஜயமனோ-கரன் பிந்துசா | ஜெயக்குமார் யாழினி | பற்குணம் சுபஸ்திகா | சிறீகரன் யாழ்மறவன் | மோகனதாஸ் நிர்ஷிகா | கணேசநாதன் தீபிகா | உமாதீஸ்வரன் ஆனந்தி | இராமநாதன் டிசாத்மன | ரவீந்திரன் மதுஷாலினி | கிறிஸ்ரி டானியல் குமணன் | சிவணேசன் மயூரன் |



| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உதயகுமார் ...சோப்பிரியன் | பரணீஸ்வரன் ஜஸ்றீனா | பன்னீர்ச் செல்வம் அபிலாஸ் | தர்மரட்ணம் திவ்வியன் | ராஜ்குமார் அபிநயா | புஸ்பாகரன் குபேரன் | விமலேந்திரன் சஞ்சீதா | பாலச்சந்திரன் சானுஜன் | பிறேமசீலன் வீனஸ்ஷரான் | கிருபாகரன் கலைமதி | விமலராசா விதுஷன் | குபேந்திரன் டிலக்சனா | தமிழ்வாணன் தேசிகன் | திருக்குமார் தீவிகா |



| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ...மகாதேவன் ...டனோஜா | நகுலேந்திரன் கனிச்செல்வி | அனந்தராசா சஜிராம் | சிவநாதச்செ-சல்வம் சஞ்சிகா | சிவகுமார் புகழ்மதி | சுரெந்திரன் ஜதுர்சிகா | சுந்தரலிங்கம் சஞ்சிகா | றியன்சி பொனிப்பஸ் கெல்கிசன் | விக்னேஸ்வரன் நிரோஜன் | அடைக்கன் கஜேந்தினி | றவிக்குமார் தமிழ்நிலா | கமலதாசன் துசாந்தன் | திருக்குமார் ஜதுஷா | இராஜேந்திர-குமார் ராகவன் |



| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ...ரோஜேந்திரம் கோபிகா | கிரிதாசன் திருமகள் | மகேஸ்வரன் கௌசிகன் | சோதிரவி லக்சிகா | சிவப்பிரபு இசைப்பிரியா | குணபால சிங்கம் லஜீவ் | மோகன் அகவிழி | சிவபாலன் சோலைப் பிரியன் | வில்பிரட் தவராசா தனுஜன் | சிவகுமார் கிஷாந் | மகேந்திரன் சுஜன் | விஜயகுமார் பிரிந்திகா | தோமஸ் டிலக்சன் | யேசுமரியன் கேதுசா |



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ...நவருட்சந்திரன் றொனால்ட் | பிரகாஷ் றம்மிலட்சுமி | கருணாகரன் கருவிஜன் | ராயு தனுசியா | பத்மநாதன் வதுர்சன் | ஜேயோகரன் றதுசன் | சுகிர்சன் சாளினி | பாலகிருஸ்ணன் அபினிசா | பிரபாகரன் சாருமதி | பத்மராசா கயல்விழி | தலையலிங்கம் லோஜினி |

# 2012/2013 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி - வெட்டுப்புள்ளி விபரம் (பழைய பாடத்திட்டம்)

| COURSE OF STUDY / DISTRICT | MEDICINE | DENTAL SURGERY | VETERINARY SCIENCE | MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | AGRICULTURE | FOOD SCIENCE & NUTRITION | FOOD SCIENCE & TECHNOLOGY | BIOLOGICAL SCIENCE | APPLIED SCIENCES (BIO SC) | ENGINEERING | ENGINEERING (EM) | ENGINEERING (TM) | QUANTITY SURVEYING | COMPUTER SCIENCE | PHYSICAL SCIENCE | SURVEYING SCIENCE | APPLIED SCIENCES (PHY SC) | MANAGEMENT | ESTATE MANAGEMENT & VALUATION | COMMERCE | PUBLIC MANAGEMENT (SPECIAL) | BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | LAW |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Colombo | 1.9247 | 1.8616 | 1.7059 | 1.8029 | 1.5410 | 0.8333 | 1.3661 | 1.6743 | 1.2522 | 1.1366 | 1.9974 | 1.9561 | 1.8739 | 1.7736 | 1.5620 | 0.8712 | 1.4259 | 0.7276 | 1.5743 | 1.4065 | 1.4458 | 1.4792 | 1.3556 | 1.6599 |
| Gampaha | 1.7977 | 1.7936 | 1.6837 | 1.7844 | 1.4509 | 0.7778 | 1.4487 | 1.7067 | 1.1191 | 0.9086 | 1.6423 | 1.6162 | 1.6250 | 1.3170 | 1.3143 | 0.8012 | 1.2583 | 0.7228 | 1.5747 | 1.3884 | 1.4041 | 1.5345 | 1.3511 | 1.7325 |
| Kalutara | 1.7937 | 1.8361 | 1.7028 | 1.7637 | 1.5233 | 0.9117 | 1.3769 | 1.6968 | 1.2408 | 1.0996 | 1.7747 | 1.7239 | 1.7739 | 1.6805 | 1.6165 | 0.9307 | 1.4934 | 0.8461 | 1.5651 | 1.4643 | 1.4162 | 1.3181 | 1.2492 | 1.7806 |
| Matale | 1.7944 | 1.7630 | 1.5428 | 1.7598 | 1.5195 | 0.5729 | 0.8701 | 1.5526 | 0.9178 | 0.8955 | 1.6821 | 1.5204 | 1.5313 | 1.4058 | 1.3138 | 0.9264 | 1.1057 | 0.8738 | 1.4886 | 1.3482 | 1.4603 | 1.5442 | 1.4868 | 1.6954 |
| Kandy | 1.7644 | 1.7606 | 1.6944 | 1.7583 | 1.5679 | 0.8970 | 1.2167 | 1.6735 | 1.2406 | 1.1051 | 1.7536 | 1.6717 | 1.6220 | 1.5985 | 1.5268 | 0.8252 | 1.4398 | 0.6945 | 1.4305 | 1.4561 | 1.4299 | 1.6208 | 1.5207 | 1.4564 |
| N' Eliya | 1.5819 | 1.5566 | 1.4996 | 1.4379 | 1.2451 | 0.5143 | 1.1729 | 1.3802 | 0.5882 | 0.5089 | 1.0501 | 0.9968 | 0.8591 | 0.7283 | 0.5133 | -0.2930 | 0.5533 | NQC | 1.3443 | 1.4294 | 1.3015 | 1.5933 | 1.3905 | 1.7977 |
| Galle | 1.8452 | 1.8184 | 1.6482 | 1.7699 | 1.5648 | 0.9434 | 1.5109 | 1.6891 | 1.2868 | 1.0966 | 1.9719 | 1.9305 | 1.7099 | 1.6676 | 1.5358 | 1.0189 | 1.4729 | 0.8153 | 1.4291 | 1.3601 | 1.4616 | 1.3718 | 1.4257 | 1.8144 |
| Matara | 1.7706 | 1.7266 | 1.5972 | 1.7235 | 1.5472 | 0.8754 | 1.4423 | 1.6312 | 1.0927 | 1.0211 | 1.9462 | 1.9102 | 1.8504 | 1.8125 | 1.6189 | 0.9795 | 1.4767 | 0.8537 | 1.3452 | 1.2649 | 1.3271 | 1.3372 | 1.3778 | 1.8128 |
| Hambantota | 1.8107 | 1.7321 | 1.6927 | 1.6951 | 1.5386 | 0.8624 | 1.5033 | 1.6212 | 0.9494 | 0.9268 | 1.6653 | 1.6402 | 1.6643 | 1.6647 | 1.5439 | 0.8840 | 1.4846 | 0.8060 | 1.2330 | 1.4723 | 1.2024 | 1.4674 | 1.4165 | 1.6849 |
| Jaffna | 1.7706 | 1.6343 | 1.3624 | 1.6196 | 1.0018 | 0.4094 | 0.8786 | 1.5434 | 0.3207 | 0.2114 | 1.8213 | 0.9507 | 0.7932 | 1.1761 | 0.6200 | 0.1165 | 0.4005 | 0.0150 | 0.5118 | -0.0206 | 0.3908 | 0.1040 | 0.0370 | 1.5904 |
| Kilinochchi | 1.3076 | 0.9926 | 0.5182 | 0.4334 | 0.0043 | -0.1152 | 0.5945 | 0.3948 | NQC | NQC | 0.5840 | 0.4898 | 0.2649 | -0.3042 | NQC | NQC | 0.1528 | NQC | 0.6182 | 0.5335 | -0.1730 | 0.5726 | 0.6267 | 0.8260 |
| Mannar | 1.6489 | 1.3183 | 0.6852 | 1.1351 | 0.4394 | NQC | -0.4772 | -0.1513 | -0.3771 | NQC | 1.0142 | -0.0518 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.3060 | NQC | NQC | -0.1077 | NQC | 1.1215 |
| Mullaitivu | 0.2908 | 0.2400 | 0.2346 | 0.1822 | 0.4695 | -0.1583 | -0.1475 | 0.0827 | NQC | NQC | 0.2208 | 0.1350 | -0.4825 | 0.0155 | NQC | NQC | NQC | NQC | 0.7111 | 0.6193 | 0.7095 | 0.6658 | 0.7436 | 1.1136 |
| Vavuniya | 1.1249 | 0.2262 | -0.3693 | 0.4516 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.0978 | 0.0111 | -0.1079 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.7530 | -0.5275 | -0.0783 | NQC | -0.1967 | NQC |
| Trincomalee | 1.5272 | 1.4994 | 1.1905 | 1.3692 | 0.5469 | 0.2306 | 1.1119 | 0.8502 | -0.2685 | NQC | 0.9981 | 0.8776 | 0.4664 | 0.3823 | NQC | NQC | NQC | NQC | 0.2316 | NQC | 0.0280 | -0.2053 | NQC | 1.0910 |
| Batticaloa | 1.6827 | 1.6320 | 1.4771 | 1.5249 | 1.5019 | 0.6819 | 1.3201 | 1.3254 | 0.3060 | 0.2741 | 1.1663 | 1.0616 | 1.0558 | 1.0791 | 0.8250 | 0.4968 | 0.8866 | NQC | 0.4258 | -0.2580 | 0.0620 | 0.2748 | 0.6657 | 1.6705 |
| Ampara | 1.4716 | 1.3864 | 1.3200 | 1.4440 | 0.7844 | 0.2809 | 0.5851 | 0.9865 | 0.2261 | 0.1015 | 1.5665 | 1.2341 | 1.0214 | 0.9467 | 0.3268 | 0.0023 | 0.8013 | -0.0291 | 0.5795 | 0.6175 | 0.3377 | 0.6806 | -0.2755 | 1.6375 |
| Puttalam | 1.5579 | 1.5503 | 1.3769 | 1.5396 | 1.4572 | 0.4874 | 1.1311 | 1.4333 | 0.6953 | 0.6160 | 1.3613 | 1.0627 | 0.7484 | 0.8789 | 0.6987 | 0.0156 | -0.1380 | 0.1851 | 1.3667 | 0.9527 | 1.1925 | 1.2849 | 0.3869 | 1.7437 |
| Kurunegala | 1.8654 | 1.8585 | 1.6820 | 1.7259 | 1.5549 | 0.9056 | 1.3863 | 1.6273 | 1.2174 | 1.0727 | 1.8270 | 1.8190 | 1.7896 | 1.7603 | 1.5861 | 1.0526 | 1.4331 | 0.8602 | 1.5816 | 1.4613 | 1.4510 | 1.5458 | 1.4052 | 1.6539 |
| Anuradhapura | 1.5549 | 1.5426 | 1.4547 | 1.5242 | 1.4115 | 0.7369 | 1.3531 | 1.4356 | 0.8224 | 1.1375 | 1.5321 | 1.4975 | 1.4390 | 1.4310 | 1.2888 | 0.8337 | 1.3827 | 0.7762 | 1.4048 | 1.3935 | 1.3392 | 1.3937 | 1.4569 | 1.7555 |
| Polonnaruwa | 1.6311 | 1.4918 | 1.4108 | 1.4246 | 1.2829 | 0.6483 | 1.2752 | 1.4692 | 0.7100 | 0.7067 | 1.3816 | 1.2477 | 1.3667 | 1.1252 | 0.9715 | 0.3388 | 0.8090 | 0.2070 | 1.4179 | 1.3432 | 1.2323 | 1.3554 | 1.0930 | 1.3502 |
| Badulla | 1.7306 | 1.7142 | 1.7036 | 1.6804 | 1.4895 | 0.8686 | 1.3694 | 1.6273 | 1.0532 | 0.9225 | 1.5746 | 1.4926 | 1.5212 | 1.4716 | 1.2898 | 0.7359 | 1.0846 | 0.7159 | 1.4131 | 1.5117 | 1.4006 | 1.5251 | 1.4683 | 1.4236 |
| Monaragala | 1.4217 | 1.3800 | 1.3631 | 1.3392 | 1.2505 | 0.3904 | 1.3191 | 1.1366 | 0.3780 | 0.3692 | 1.3376 | 1.3032 | 1.0668 | 1.1177 | 0.7609 | 0.1793 | 1.0270 | 0.3762 | 1.5884 | 1.5578 | 1.4723 | 1.5673 | 1.5686 | 1.3055 |
| Kegalle | 1.8445 | 1.8415 | 1.7205 | 1.7543 | 1.4086 | 0.9377 | 1.4209 | 1.5464 | 1.2174 | 1.1004 | 1.7858 | 1.6520 | 1.5391 | 1.6559 | 1.5451 | 0.9830 | 1.3170 | 0.7679 | 1.4548 | 1.4899 | 1.3609 | 1.4590 | 1.4268 | 1.7002 |
| Ratnapura | 1.6959 | 1.6951 | 1.5765 | 1.6712 | 1.4610 | 0.8637 | 1.4447 | 1.5796 | 1.0511 | 0.9717 | 1.5524 | 1.5420 | 1.4070 | 1.3896 | 1.3761 | 0.9071 | 1.2338 | 0.8351 | 1.4855 | 1.4833 | 1.4538 | 1.6657 | 1.4682 | 1.8573 |

| COURSE OF STUDY / DISTRICT | ARTS * | ARTS (SP) / MASS MEDIA* # | ARTS (SP) / PERFORMING ARTS * # | ARTS (SAB) - A* | ARTS (SAB) - B* | MANAGEMENT STUDIES (TV) - A | MANAGEMENT STUDIES (TV) - B | COMMUNICATION STUDIES * | PEACE & CONFLICT RESOLUTION * | ISLAMIC STUDIES * | ARABIC LANGUAGE * | ARCHITECTURE # | DESIGN (ARCHITECTURE) # | LANDSCAPE ARCHITECTURE # | TOWN & COUNTRY PLANNING | FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT # | INFORMATION TECHNOLOGY (University of Moratuwa) | INFORMATION TECHNOLOGY & MANAGEMENT | FACILITIES MANAGEMENT | TRANSPORT & LOGISTICS MANAGEMENT | MANAGEMENT & INFORMATION TECHNOLOGY # (University of Kelaniya) | INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | STATISTICS & OPERATIONS RESEARCH | COMPUTATION & MANAGEMENT |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Colombo | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.2731 | 1.2406 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | 0.8493 | -0.0402 | 0.4514 | 1.5681 | 0.8304 | 1.6626 | 1.6704 | 1.5689 | 1.8422 | 1.4863 | 1.5235 | 1.4582 | 1.2921 |
| Gampaha | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.2679 | 1.1849 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | 0.4504 | NQC | 0.1805 | 1.5801 | 0.9632 | 1.4008 | 1.6589 | 1.4170 | 1.5022 | 1.3354 | 1.2445 | 1.2143 | 1.3122 |
| Kalutara | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.2401 | 1.2104 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | 1.0606 | 0.3347 | 0.4997 | 1.5686 | NQC | 1.6717 | 1.6703 | 1.5561 | 1.6898 | 1.4956 | 1.5145 | 1.4604 | 1.2929 |
| Matale | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.2357 | 1.2084 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | 0.4271 | 1.0627 | NQC | 1.6627 | 1.2671 | 1.1955 | 1.4985 | 1.3915 | 1.2965 | 0.9984 | 1.2230 |
| Kandy | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.3537 | 1.2915 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | 1.0273 | NQC | NQC | 1.5049 | NQC | 1.5546 | 1.4901 | 1.4005 | 1.5310 | 1.2193 | 1.2717 | 1.3381 | 1.3620 |
| N' Eliya | 1.2276 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.2867 | 1.2827 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 0.9156 | NQC | 0.6724 | 1.2078 | 1.2365 | 0.8324 | 0.4239 | 0.1845 | 0.3450 | 1.289[illegible] |
| Galle | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.2818 | 1.2299 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 1.5476 | NQC | 1.5924 | 1.5858 | 1.5729 | 1.6132 | 1.2143 | 1.4345 | 1.4233 | 1.463[illegible] |
| Matara | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.2341 | 1.2421 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | 1.1304 | NQC | 0.2507 | 1.6149 | NQC | 1.6442 | 1.6307 | 1.4985 | 1.7440 | 1.3992 | 1.4144 | 1.3878 | 1.6058 |
| Hambantota | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.1680 | 1.2254 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | 0.4901 | NQC | 0.4567 | 1.6413 | NQC | 1.5785 | 1.6205 | 1.3391 | 1.5997 | 1.4091 | 1.3064 | 1.4529 | 1.4787 |
| Jaffna | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 0.0563 | 1.1286 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 0.8372 | NQC | 1.3229 | 0.8558 | 0.3641 | 0.6222 | NQC | 0.1692 | 0.0754 | 0.0600 |
| Kilinochchi | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | -0.1881 | 1.1527 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | -0.5483 | NQC | NQC | NQC | -0.1197 | NQC | NQC | NQC | NQC | 0.0521 |
| Mannar | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | NQC | 0.7252 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 0.2011 | NQC | NQC | 0.9927 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.1451 |
| Mullaitivu | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 0.2324 | 1.2299 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.0075 | NQC | NQC | -0.4617 | NQC | NQC | NQC | 0.2724 |
| Vavuniya | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | NQC | 1.1877 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | -0.3699 |
| Trincomalee | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | -0.2187 | 1.1786 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 0.8400 | NQC | 0.9155 | 1.2968 | -0.5986 | 0.3628 | NQC | NQC | NQC | -0.3188 |
| Batticaloa | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | -0.3046 | 1.3379 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | 0.7769 | NQC | NQC | 0.9301 | NQC | 1.0388 | 1.3543 | NQC | 0.7457 | NQC | -0.1442 | NQC | NQC |
| Ampara | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 0.6763 | 1.3232 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 0.8323 | NQC | 0.6484 | 1.3425 | 0.7969 | 0.9398 | NQC | 0.8368 | 0.5264 | 0.8747 |
| Puttalam | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 0.6577 | 1.1411 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 1.0886 | NQC | 1.0364 | 1.0373 | 0.6508 | 0.6649 | 0.4967 | 0.4212 | 0.3172 | 1.1731 |
| Kurunegala | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.4057 | 1.3618 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | 0.8470 | 0.8949 | 0.2786 | 1.5338 | NQC | 1.6599 | 1.5959 | 1.4790 | 1.7557 | 1.5349 | 1.5284 | 1.4945 | 1.6057 |
| Anuradhapura | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.2767 | 1.2756 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 1.6384 | NQC | 1.5086 | 1.3931 | 1.3394 | 1.3832 | 1.3538 | 1.2823 | 1.3915 | 1.3828 |
| Polonnaruwa | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.0732 | 1.2416 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 1.1341 | NQC | 0.8562 | 1.2552 | 0.6420 | 0.8488 | 0.3858 | 0.6040 | 0.5266 | 1.4224 |
| Badulla | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.4004 | 1.2728 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | 0.5130 | NQC | 1.4072 | 0.5411 | 1.3597 | 1.3197 | 1.1755 | 1.4758 | 1.3054 | 1.2682 | 1.1110 | 1.3285 |
| Monaragala | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.4234 | 1.3749 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | NQC | NQC | NQC | 1.3157 | NQC | 0.9443 | 1.4291 | 1.5073 | 1.0366 | 0.8377 | 0.6342 | 0.4714 | 1.5192 |
| Kegalle | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.2538 | 1.2024 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | -0.1130 | NQC | NQC | 1.1865 | NQC | 1.6627 | 1.5857 | 1.3799 | 1.5319 | 1.4902 | 1.5175 | 1.3323 | 1.3556 |
| Ratnapura | 1.2499 | 1.1729 | 0.9396 | 1.2483 | 1.3278 | 1.3793 | 1.3598 | 1.2389 | 1.5511 | 1.2013 | 1.0231 | 0.4484 | NQC | NQC | 1.4182 | NQC | 1.5017 | 1.4879 | 1.4374 | 1.4067 | 1.1991 | 1.3066 | 1.2682 | 1.4232 |

| COURSE OF STUDY / DISTRICT | INFORMATION & COMMUNICATION TECHNOLOGY # | INFORMATION SYSTEMS # (University of Colombo School of Computing) | AYURVEDIC MEDICINE & SURGERY | UNANI MEDICINE & SURGERY | SIDDHA MEDICINE | HEALTH PROMOTION | NURSING | PHARMACY | MEDICAL LABORATORY SCIENCES | RADIOGRAPHY | PHYSIOTHERAPY | ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | FISHERIES & MARINE SCIENCES (University of Ruhuna) | ANIMAL SCIENCE & FISHERIES (University of Peradeniya) | FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | COMPUTING & INFORMATION SYSTEMS # | PHYSICAL EDUCATION # | SPORTS SCIENCES & MANAGEMENT # | SPEECH & HEARING SCIENCES | TOURISM & HOSPITALITY MANAGEMENT | AGRICULTURAL RESOURCE MANAGEMENT & TECHNOLOGY | AGRIC BUSINESS MANGEMENT | GREEN TECHNOLOGY |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Colombo | 0.3050 | 0.6459 | 1.0997 | 0.8217 | NQC | 0.9718 | 0.8803 | 1.5912 | 1.6498 | 1.3747 | 1.7051 | 1.2194 | 1.0611 | 1.1090 | 1.1884 | 1.2336 | 0.4271 | 0.4271 | 0.6804 | 1.3293 | 1.4105 | 1.0404 | 1.1776 | 1.1213 |
| Gampaha | 0.7711 | 1.0357 | 0.9687 | 0.9416 | NQC | 0.8639 | 0.9334 | 1.5149 | 1.5433 | 1.4540 | 1.7374 | 1.0480 | 0.9301 | 0.9656 | 1.0751 | 1.2929 | 0.6702 | NQC | 0.9917 | 1.4264 | 1.1877 | 0.9718 | 0.8703 | 1.0273 |
| Kalutara | 0.8686 | 1.3746 | 1.1060 | 0.9193 | 0.2964 | 1.0311 | 1.0111 | 1.5534 | 1.6442 | 1.5495 | 1.6480 | 1.1119 | 1.0342 | 1.1653 | 1.0982 | 1.2508 | 0.6505 | 1.0589 | 1.0697 | 1.3401 | 1.2423 | 1.0433 | 1.0387 | 1.0913 |
| Matale | 0.5653 | NQC | 0.8400 | 0.7138 | 0.3979 | 0.5736 | 0.7254 | 1.4216 | 1.6034 | 1.2537 | 1.7189 | 1.0824 | 0.8533 | 0.6985 | 1.2551 | 1.2350 | NQC | NQC | -0.0265 | 1.2860 | 1.2207 | 0.6796 | 0.5718 | 0.6721 |
| Kandy | 0.6150 | 1.0803 | 1.1366 | 0.8493 | 0.2445 | 0.9757 | 0.9049 | 1.4963 | 1.5727 | 1.3639 | 1.6904 | 1.2293 | 0.9249 | 1.2091 | 1.2136 | 1.3347 | 0.5267 | NQC | 0.8077 | 1.2182 | 1.3896 | 0.9818 | 0.9826 | 1.0456 |
| N' Eliya | NQC | NQC | 0.4458 | 0.9285 | -0.5996 | 0.6138 | 0.9370 | 1.2191 | 1.4040 | 1.1090 | 1.5326 | 1.0634 | 0.7091 | 0.9687 | 1.0633 | 1.1514 | NQC | NQC | NQC | 1.1135 | 1.2330 | 0.9709 | 0.7136 | 0.8879 |
| Galle | 0.8282 | 1.1867 | 0.9972 | 0.7138 | NQC | 1.0356 | 1.0665 | 1.5673 | 1.6265 | 1.5349 | 1.7419 | 1.1282 | 1.0564 | 1.2205 | 1.2522 | 1.2295 | 0.6743 | 1.0759 | 1.1159 | 1.4166 | 1.2609 | 1.0697 | 1.0095 | 1.1372 |
| Matara | 0.7783 | 1.3491 | 0.8737 | 0.8545 | NQC | 0.9324 | 0.9510 | 1.5949 | 1.6542 | 1.5310 | 1.7151 | 1.2174 | 1.0443 | 1.2589 | 1.1220 | 1.2848 | 0.7070 | NQC | 1.1353 | 1.4608 | 1.3174 | 1.0393 | 1.0288 | 1.0550 |
| Hambantota | 0.6250 | NQC | 1.0235 | 0.8154 | NQC | 0.8877 | 0.9655 | 1.5818 | 1.6097 | 1.5779 | 1.6812 | 0.9903 | 0.9340 | 1.3099 | 1.1796 | 1.2396 | 0.7334 | 0.9447 | -0.1266 | 1.4471 | 1.4101 | 1.0171 | 1.1195 | 0.9209 |
| Jaffna | 0.0816 | NQC | 0.1723 | 0.0605 | 0.2769 | 0.3871 | 0.5726 | 1.1744 | 1.2384 | 0.8371 | 1.5733 | 0.7213 | 0.5144 | 0.5195 | 0.7384 | 1.1737 | NQC | NQC | 0.0078 | 0.9784 | 1.0649 | 0.3774 | 0.2063 | 0.5505 |
| Kilinochchi | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.2839 | -0.1343 | NQC | 0.4441 | NQC | NQC | -0.1366 | 0.2247 | 0.8886 | NQC | -0.1419 | NQC | 1.0491 | 1.1449 | -0.1582 | NQC | NQC |
| Mannar | NQC | NQC | 0.1035 | NQC | NQC | NQC | 0.2655 | NQC | 0.4765 | 0.0259 | 0.7637 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | -0.1926 | 0.1918 | NQC | NQC | NQC |
| Mullaitivu | NQC | NQC | -0.2337 | NQC | -0.0234 | -0.3561 | NQC | NQC | -0.1752 | 0.1846 | 0.1868 | NQC | NQC | NQC | -0.2284 | 1.0636 | NQC | NQC | NQC | 1.1360 | 0.5573 | -0.6458 | -0.0044 | NQC |
| Vavuniya | NQC | NQC | -0.3054 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.1702 | NQC | NQC | NQC | 0.0335 | 0.5780 | NQC | NQC | NQC |
| Trincomalee | NQC | NQC | NQC | 0.7868 | 0.4687 | -0.0334 | NQC | 1.3493 | 1.4014 | 0.3272 | 1.3879 | -0.1704 | NQC | -0.4209 | NQC | 1.1064 | NQC | -0.2434 | NQC | 0.9925 | 0.9612 | 0.0689 | NQC | 0.4079 |
| Batticaloa | 0.2915 | NQC | 0.5303 | 1.0111 | 0.3926 | 0.4687 | 0.8469 | 1.2992 | 1.6242 | 1.1319 | 1.5048 | 0.8224 | 0.6044 | 0.5549 | 1.0703 | 1.3134 | NQC | -0.4968 | NQC | 0.8637 | 1.0576 | 0.7984 | 0.5934 | 0.7870 |
| Ampara | 0.4892 | NQC | 0.0164 | 0.0627 | 0.0490 | 0.7146 | 0.6035 | 0.9141 | 0.9987 | 0.8786 | 1.2583 | 0.0990 | -0.1166 | 0.2961 | 0.5026 | 1.4519 | NQC | NQC | -0.8103 | 1.1018 | 1.0222 | 0.6599 | 0.4017 | 0.4411 |
| Puttalam | 0.6090 | NQC | 0.6767 | 0.9673 | 0.4589 | 1.0064 | 0.7352 | 1.2876 | 1.5003 | 1.2839 | 1.4780 | 0.9903 | 0.6477 | 1.1860 | 0.5321 | 1.2127 | NQC | NQC | NQC | 1.4171 | 1.0098 | 0.8377 | 0.5288 | 0.7891 |
| Kurunegala | 0.8073 | 1.1983 | 1.1082 | 0.9942 | NQC | 1.0396 | 1.0395 | 1.5880 | 1.6412 | 1.5303 | 1.7221 | 1.2091 | 1.0696 | 1.2044 | 1.2067 | 1.3430 | 0.7623 | 0.9080 | 0.8398 | 1.4746 | 1.3946 | 1.0373 | 1.1399 | 1.0456 |
| Anuradhapura | 0.8640 | 0.5968 | 0.8969 | 0.6020 | 0.0027 | 1.0827 | 0.8917 | 1.5032 | 1.4495 | 1.2331 | 1.5379 | 0.8092 | 0.7515 | 1.3237 | 1.0165 | 1.2493 | 0.3268 | 0.2225 | 0.0925 | 1.4936 | 1.3300 | 0.7675 | 0.7905 | 0.9871 |
| Polonnaruwa | 0.4001 | NQC | 0.8307 | 0.6299 | 0.3462 | 1.0042 | 0.9679 | 1.3646 | 1.3268 | 1.2729 | 1.3161 | 0.7607 | 0.7753 | 0.9346 | 0.9171 | 1.2293 | NQC | 0.1094 | NQC | 1.3083 | 1.0967 | 0.6060 | 1.1666 | 0.6119 |
| Badulla | 0.8208 | 0.7764 | 1.0798 | 0.8254 | -0.4063 | 1.0280 | 1.0849 | 1.4894 | 1.5588 | 1.5364 | 1.6929 | 1.2306 | 0.9433 | 1.3178 | 1.2826 | 1.2098 | 0.6525 | 0.8456 | 1.0777 | 1.2365 | 1.3587 | 1.0778 | 1.1660 | 0.9801 |
| Monaragala | NQC | NQC | 0.7260 | 0.4711 | NQC | 0.8545 | 0.7135 | 1.0002 | 1.0989 | 1.0057 | 1.2098 | 0.5834 | 0.6935 | 0.8254 | 0.6038 | 1.3331 | NQC | 0.4176 | -0.7796 | 1.2279 | 1.3961 | 0.9465 | 0.6145 | 0.6368 |
| Kegalle | 0.8626 | 1.0150 | 1.0342 | 0.8569 | NQC | 0.9888 | 1.0819 | 1.5534 | 1.6550 | 1.3654 | 1.6735 | 1.2159 | 1.0288 | 1.3115 | 1.2901 | 1.2293 | 0.6174 | 0.6931 | 1.0714 | 1.1633 | 1.3645 | 1.0474 | 1.0018 | 1.0410 |
| Ratnapura | 0.6381 | 1.1953 | 0.9025 | 0.9256 | NQC | 0.9910 | 1.0017 | 1.4993 | 1.5579 | 1.4578 | 1.5818 | 1.0304 | 1.0380 | 1.1420 | 0.9666 | 1.4315 | 0.6478 | 1.0486 | 1.0585 | 1.4247 | 1.4499 | 1.0204 | 1.0189 | 0.9048 |

| COURSE OF STUDY / DISTRICT | SCIENCE & TECHNOLOGY # | COMPUTER SCIENCE & TECHNOLOGY # | ENTREPRENEURSHIP & MANAGEMENT # | ANIMAL SCIENCE # | EXPORT AGRICULTURE # | TEA TECHNOLOGY & VALUE ADDITION # | INDUSTRIAL INFORMATION TECHNOLOGY # | MINERAL RESOURCES & TECHNOLOGY # | AQUATIC RESOURCES TECHNOLOGY # | PALM AND LATEX TECHNOLOGY & VALUE ADDITION # | HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT # (Uva Wellassa University) | VISUAL ARTS # (University of the Visual & Performing Arts) | MUSIC # (University of the Visual & Performing Arts) | DANCE # (University of the Visual & Performing Arts) | DRAMA & THEATRE # (University of the Visual & Performing Arts) | ART & DESIGN # (Ramanathan Academy of Fine Arts) | MUSIC # (Ramanathan Academy of Fine Arts) | DANCE # (Ramanathan Academy of Fine Arts) | VISUAL & TECHNOLOGICAL ARTS (Swami Vipulananda Institute) | MUSIC (Swami Vipulananda Institute) | DANCE (Swami Vipulananda Institute) | DRAMA & THEATRE (Swami Vipulananda Institute) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Colombo | 0.6963 | 0.8323 | 0.6676 | 0.3256 | -0.2576 | 0.5472 | 0.9564 | 0.4350 | 0.5829 | 0.2686 | NQC | NQC | 0.7447 | 0.6303 | 0.5625 | NQC | NQC | 0.0454 | NQC | NQC | NQC | NQC |
| Gampaha | 0.7708 | 0.9904 | 0.7285 | 0.1369 | 0.5011 | 0.4110 | 0.6946 | 0.5419 | 0.2469 | 0.0076 | 0.9482 | 0.4457 | 0.5461 | 1.0210 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Kalutara | 0.7978 | 0.7420 | 0.7433 | 0.4371 | 0.5830 | 0.2209 | 0.7703 | 0.6756 | 0.4988 | 0.4410 | NQC | NQC | NQC | 0.5848 | 0.5802 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Matale | 0.8386 | 0.3713 | NQC | NQC | 0.3631 | 0.2100 | 0.7395 | 0.2025 | 0.3617 | NQC | NQC | NQC | NQC | 0.6066 | 0.6321 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Kandy | 0.8858 | 0.5416 | 0.6968 | 0.1145 | 0.5589 | 0.5696 | 0.7655 | 0.4930 | 0.4910 | 0.3642 | 0.7570 | NQC | 0.6367 | 0.8110 | NQC | 0.2494 | 0.9093 | NQC | NQC | 0.3159 | NQC | NQC |
| N' Eliya | NQC | -0.1127 | NQC | 0.3519 | 0.4753 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.7046 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Galle | 0.8122 | 0.8997 | 1.0203 | 0.3317 | 0.4980 | 0.5784 | 0.9379 | 0.6697 | 0.4025 | 0.3208 | 0.7498 | 0.8987 | 0.5814 | 1.0257 | 0.8147 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Matara | 0.7585 | 0.6960 | 0.9833 | -0.1784 | 0.5210 | 0.5597 | 0.7577 | NQC | 0.4626 | 0.1736 | 0.4952 | NQC | NQC | 1.1206 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Hambantota | 0.6544 | 0.6782 | 0.6584 | NQC | NQC | NQC | 0.2201 | NQC | 0.4319 | NQC | 1.3438 | 0.1851 | 1.0144 | 0.9120 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Jaffna | 0.4248 | 0.9586 | NQC | NQC | NQC | NQC | -0.1218 | -0.0833 | NQC | 0.0474 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.8236 | 0.6479 | 0.2735 | 0.3783 | 1.0058 | 0.1336 | 1.1961 |
| Kilinochchi | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.0482 | NQC | 0.1735 |
| Mannar | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.1455 | 0.4242 | NQC |
| Mullaitivu | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.8956 | NQC | NQC |
| Vavuniya | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.4940 |
| Trincomalee | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | -0.4567 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.0961 |
| Batticaloa | NQC | NQC | NQC | -0.3177 | 0.3542 | NQC | NQC | -0.1937 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | -0.3367 | -0.1052 | 0.8390 | NQC | 0.9839 |
| Ampara | -0.2128 | 0.3409 | NQC | -0.3377 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.7310 | NQC | NQC | NQC | 0.8445 | 0.9067 | 0.6199 | 0.5185 | 1.1540 |
| Puttalam | NQC | -0.2767 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.8456 | 0.4269 | NQC | 0.9616 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Kurunegala | 0.8217 | 1.0012 | 0.9361 | 0.4003 | 0.6606 | 0.5442 | 0.8409 | 0.4947 | 0.6167 | 0.3322 | 0.6854 | 0.8681 | 0.7713 | 1.0664 | 0.2559 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Anuradhapura | 0.6960 | 0.4189 | 0.3003 | 0.4818 | 0.6444 | 0.5735 | 0.2370 | 0.4464 | 0.3277 | 0.1569 | NQC | 0.8150 | NQC | 0.8221 | NQC | NQC | NQC | NQC | 0.1017 | NQC | NQC | NQC |
| Polonnaruwa | 0.3138 | 0.4081 | 0.6995 | NQC | NQC | 0.0929 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.6853 | 1.1154 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Badulla | 0.8801 | 0.7430 | 1.1132 | 0.4180 | 0.5510 | 0.5959 | 1.1078 | 0.5236 | 0.6191 | 0.2964 | 0.2300 | 0.7027 | 0.8933 | 1.0928 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Monaragala | NQC | 0.2230 | NQC | 0.2879 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.9950 | 0.8652 | 0.9673 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Kegalle | 0.6922 | 0.7563 | 0.1413 | -0.3839 | 0.5282 | 0.5288 | 1.2176 | 0.4994 | 0.2185 | 0.3460 | 0.8724 | -0.0626 | 0.6707 | 1.0548 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| Ratnapura | 0.8571 | 0.8438 | 1.0608 | 0.0178 | 0.6490 | 0.5788 | 0.7908 | -0.1319 | 0.6382 | 0.1422 | 0.2827 | NQC | 0.3737 | 1.1207 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |

# துரத்துகிறது துன்பம் பொறுமைசாலிகள் நாம்

## வலி.வடக்கு மக்கள் பிரதிநிதி சொல்கிறார்

இலங்கையில் பொறுமைசாலிகள் என்றால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்கள் தான். என நேற்று முன்தினம் வளலாய்ப் பகுதிக்கு அழைத்து வரப்பட்ட மக்கள் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

நாம் வாழும் முகாமில் 153 குடும்பங்கள் வாழ்கின்றோம். இங்கு 24 மலசல கூடங்கள் தான இருக்கின்றன. இதை 600 இற்கும் மேற்பட்ட மக்கள் பாவிப்பது என்பது ஒரு பொறுமையான விடயம்தான்.அதுமட்டுமல்ல, சமூகத்தில் எம்மைக் கேவலமாகப் பார்க்கின்ற விடயம் கவலைக்குரியது.

எமது முகாம்களில் கல்வியியலாளர்கள், கலைஞர்கள் என எல்லாத் தரப்பினரும் இருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை. விளையாட்டிலும் சரி, கலை நிகழ்வுகளிலும் சரி எம் பிள்ளைகள் புறந்தள்ளப் படுகின்றனர்.

அதுமட்டுமல்ல எமக்கான உதவித்திட்டங்களில் கூட எம்மைப் பிரித்துப் பார்க்கின்றனர். பெண்களுக்கான கடனுதவிகள், பொருளுதவிகள் மற்றும் சொந்த வீடு, காணி என்பன இல்லை. உங்களுக்குத் தரமுடியாது என நாம் ஒதுக்கப் படுகின்றோம். இது வருத்தம்தரும் விடயம். இவ்வளவு காலமும் இவ்வாறு தான் நாம் வாழ்கின்றோம். இது யாருக்கும் தெரிவதில்லை.

இன்று இதற்கு ஒரு விடிவு கிடைக்கும் என்று நம்புகின்றோம். இப்பகுதிகளில் மீள்குடியமர நாம் விருப்பம் தெரிவிக்க வந்துள்ளோம் என அவர் மேலும தெரிவித்தார். (இ)

# யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் விழிப்புணர்வு ஊர்வலம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கமும், திருநெல்வேலி மற்றும் யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகங்களும் இணைந்து அண்மையில் ஊர்வலம் ஒன்றை நடாத்தின.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமாகி நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை நிலையத்தில் வந்து முடிவடைந்த இவ் ஊர்வலத்தின் நிறைவாக அறக்கொடையினரின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் கூட்டம் ஒன்று இடம் பெற்றது.

கைதடி தொழில்பூங்காவை சேர்ந்த 10 பேருக்கு தியாகி அறக்கொடை நிலையத்தினால் வெள்ளைப் பிரம்புகள் வழங்கப்பட்டன. திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தினரால் 15பேருக்கு குடைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அத்துடன் இவர்கள் குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் ஒன்றையும் வழங்கினர்.

மாற்றுத் திறனாளிகளான விழிப்புலனற்றோரை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்காமல் அவர்களையும் முழுமை பெற்ற மனிதர்களாக சமுதாயத்தில் இணைத்துக்கொள்ளுமாறு கோரி இவ் ஊர்வலம் நடாத்தப்பட்டது.

பெருமளவிலான விழிப்புலனற்றோரும், லயன்ஸ் கழகத்தினரும், நலன் விரும்பிகளும் இதில் கலந்து கொண்டனர். (137)

# "கப்ருக சங்கம்" அமைப்பினூடாக தென்னங்கன்றுகள் விநியோகம்

தென்னை அபிவிருத்திச்சபை பிரதேச செயலகம் ஊடாக கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் கப்ருக சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கி தென்னைப்பயிர் உற்பத்தியையும் தென்னை சார்ந்த கைப்பணிப்பொருட்களின் உற்பத்தியையும் ஊக்குவித்து வருகிறது.

திறன் தொடர் நடவடிக்கையாக தற்போது உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 18 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு 3000 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

கன்றுகள் குறித்த சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு தலா 5 தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட உள்ளன.

இணுவில் வடகிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 25 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டதாக அதன் தலைவர் சி. மகாலிங்கம் தெரிவித்தார்.


அவர் மேலும் கூறுகையில், தென்னைப்பயன்பாட்டில் தன்னிறைவு பெறும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் கால் ஏக்கரில் இருந்து 5 ஏக்கர் வரை தென்னை பயிரிட விரும்புபவர்களுக்கு இலவசமாக தென்னம் கன்றுகள் வழங்கப்படும் மேலும் இவர்களுக்கு தென்னைக் கைப்பணிப் பயிற்சிகள் வழங்கவும் பயிற்சி பெற்று வந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் வங்கிக் கடன்கள் பெறவும் மானிய அடிப்படையில் பசளைகள் பெறவும் வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிவித்தார். (120)

# பாடசாலை நாட்கள் சுற்றறிக்கை வெளியீடு

அடுத்த ஆண்டிற்கான பாடசாலை நாட்கள் தொடர்பான சுற்றறிக்கை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் தமிழ், சிங்கள பாடசாலைகளினதும், முஸ்லிம் பாடசாலைகளினதும் தவணை நாட்கள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய தமிழ், சிங்களப் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஜனவரி 02 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விடுமுறைக்காக மூடப்படும். இரண்டாம் தவணைக்காக ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறைக்காக மூடப்படும். மூன்றாம் தவணைக்காக செப்ரெம்பர் மாதம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு டிசம்ப்ர் மாதம் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறைக்காக மூடப்படும்.

இதேவேளை முஸ்லிம் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஜனவரி 02 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை விடுமுறைக்காக மூடப்படும். இரண்டாம் தவணைக்காக ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டு யூன் மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறைக்காக மூடப்படும். மூன்றாம் தவணைக்காக ஒக்ரோபர் மாதம் 04 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறைக்காக மூடப்படும். (03)



தேசிய மட்ட கணித வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ். மாவட்ட மாணவர்கள் அண்மையில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் கௌரவிக்கப்பட்டபோது... (48)

# பதிவிறக்கப் பெட்டகம்

"நேற்று கணக்காசிரியர் உன்னை வகுப்பில் திட்டினாராமே... ஏன்?"

"ஆறும் ஆறும் சேர்ந்தால் என்ன வரும் என்று கேட்டார். நான், நிறைய தண்ணீர் வரும் என்று சொன்னேன்..."

*** *** *** ***

"அவரை போலி டாக்டர் என்று எதை வைத்துச் சொல்கிறாய்?"

"கிட்னி/பெயில் ஆகியிட்டுதென்று சொன்னால், 'ஏன் ரியூஷனுக்கு அனுப்பேல்லையா?' என்று கேட்கிறாரே?"

*** *** *** ***

"இவர் போலி டாக்டர் என்று ஏன் சொல்கிறாய்?"

"பண வீக்கத்துக்குக் கூட மருந்து வைச்சிருக்கிறேன் என்று சொன்னாரே!"

*** *** *** ***

"என்னங்க... கடைக்கார மாணிக்கம் நம் வீட்டு வழியாகப் போகும் போதும் வரும்போதும் முறைத்துப் பார்த்தபடியே போகிறார்"

"அவர் கடையில் மூவாயிரம் ரூபாவுக்குக் கடன் நிக்குது. இந்த உரிமையைக் கூட நாம் அவருக்குக் குடுக்கேல்லையென்றால் எப்படி?"

*** *** *** ***

"லவ்வுக்கும், 7.29–க்கும் ஒரு ஒற்றுமை இருக்கு தெரியுமா?"

"ஊஹூம்"

"இந்த இரண்டுக்கும் பிறகுதான் ஏழரை ஆரம்பிக்கும்"

*** *** *** ***

**நோயாளி:** காதில் ரயில் ஓடுற மாதிரி சத்தம் கேட்குது டாக்டர்

**டாக்டர்:** (பரிசோதித்துவிட்டு) எனக்கு ஒன்றும் கேட்கவில்லையே

**நோயாளி:** அப்போ ஏதாவது சிக்னல்ல நின்றிருக்குமோ?

*** *** *** ***

**எழுத்தாளர்:** வெயிற்றான கதை கேட்டீங்களே... எழுதிக் கொண்டுவந்திருக்கிறேன்...

**ஆசிரியர்:** அப்படியா, கதைக்கு என்ன தலைப்பு?

**எழுத்தாளர்:** ஐம்பது கிலோ!

*** *** *** ***

**கணவன்:** என் மேலதிகாரி இடியட் என்று என்னைத் திட்டி விட்டார்.

**மனைவி:** விடுங்க.. அவருக்கு இன்றுதான் உங்களைப் பற்றித் தெரிந்திருக்கிறது.

*** *** *** ***

**ஆசிரியர்:** என்னடா இது? சிங்களத்திலே ஏதோ எழுதி இருக்கிறாய்..?

**மாணவன்:** சேர், உங்களைப் பாராட்ட எனக்குத் தமிழ்ல வார்த்தையே கிடைக்கேல்லை சேர்...

*** *** *** ***

"உங்களைப் புகழ்ந்து பேச வார்த்தைகளே கிடைக்கவில்லை தலைவரே!"

"ஒரு ஐந்தாம் வகுப்பு வரையிலாவது படிச்சிருந்தால்தானேடா வார்த்தைகள் 'கிடைக்கும்?"

*** *** *** ***

**அவர்:** வாயைக் கட்டி, வயித்தைக் கட்டி, கட்டின வீடு இப்போ தரைமட்டமாய் போச்சுதடாப்பா...

**மற்றவர்:** செங்கல், மண், சிமெந்தை வைத்துக் கட்டியிருந்தால் அப்படி ஆகியிருக்காது...!

*** *** *** ***

"தலைவர் போலியான வாக்குறுதிகளைக் குடுக்கிறார் என்று எதை வைச்சுச் சொல்றாய்?"

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சிரியா நாட்டைச் சிரிக்க வைப்போம் என்கிறாரே..."

*** *** *** ***

**ஆசிரியர்:** அட, குமாரின் தாத்தாவா..? நீங்கள் செத்துப் போனதாய் உங்கள் பேரன் லீவு எடுத்துக்கொண்டு போனானே..!

**தாத்தா:** நீங்கள்தான் அவன் வகுப்பாசிரியரா? நீங்கள் செத்ததுக்குத்தான் பள்ளிக்கூடம் லீவு என்று சொன்னானே..?

*** *** *** ***

நீதிபதி: ஏய் கந்தசாமி, நீ கதவை உடைத்துத் திருடினாயா..?

கந்தசாமி: வேறு வழியே தெரியவில்லை ஐயா...!

*** *** *** ***

"நீ 15ஆவது தடவையாக நீதிமன்றத்துக்கு வந்திருக்கிறாய். உனக்கு 50 ஆயிரம் அபராதம் விதிக்கிறேன்"

"ரெகுலர் கஸ்டமருக்கு டிஸ்கவுண்ட் இல்லையா ஐயா?"

# என்றும் குன்றாத மக்கள் சேவை விடாமல் தொடர்வோம்



(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்கள் போன்று எதிர்காலத்திலும் மக்களின் நலன்களில் அதிக அக்கறையெடுத்து எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று பூநகரி நாச்சிக்குடா பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசலில் இடம்பெற்ற முஸ்லிம் மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

நாம் என்றும் அநீதிகளுக்கு எதிரானவர்கள் அநீதிகள் இடம்பெறும் போதெல்லாம் அதற்கெதிராக குரல் கொடுத்துவந்தவர்கள் இந்த நாட்டில் வாழ்கின்ற எந்த சமூகங்கள் மீதும் அநீதிகள் இழைக்கப்படுவதனை நாம் ஒரு போதும் அனுமதித்தவர்கள் அல்ல எல்லா மக்களும் நிம்மதியாக, சகல உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதில் அதிக கவனம் எடுத்து வருகின்றோம் இதற்காகவே எமது பணிகளையும் முன்னெடுத்து வருகின்றோம் எனத்தெரிவித்த அவர்,

எங்கள் மக்கள் அதிக தேவைகள் உள்ள சமூகமாக உள்ளனர் இந்த தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்ற போதே எம்மக்கள் ஒரு நிறைவான சமூகமாக நிமிர்ந்து நிற்கமுடியும் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் இந்த தேவைகளில் கணிசமானவற்றை நாம் பூர்த்தி செய்துள்ளோம் இருப்பினும் இன்னும் மக்களின் தேவைகள் முழுமை பெறவில்லை ஏராளமான பணிகளை மக்களுக்கு இன்னும் செய்யவேண்டியுள்ளது அவற்றையும் பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனவும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த வடக்குமாகாண சபை உறுப்பினர் தவநாதன், தான் மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமைக்கு தனது நன்றிகளைத் தெரிவித்து கொண்டார் தொடர்ந்து ஒரு எதிர்க்கட்சி மாகாண சபை உறுப்பினர் என்ற வகையில் தனது அதிகாரத்தினை முழுமையாக மக்களின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தி உழைப்பேன் எனவும் குறிப்பிட்டார்.

பூநகரி பிரதேச சபை உறுப்பினர் காசிம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் நிர்மல றொபின்சன் மற்றும் மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# நினைவுப் பேருரை

நடராஜா ரவிராஜின் நினைவு தினமும் நினைவுப் பேருரையும் இன்று சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள ஐங்கரன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 1.30 மணியளவில் சட்டத்தரணி கேசவன் சயந்த தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வரவேற்புரையினை வைத்தியர் எஸ்.எஸ்.அருளானந்தம் வழங்குவார்.

சிறப்புரையினை வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானமும் விசேட உரையினை பேராசிரியர் சிற்றம்பலமும் வழங்குவர்.நினைவுரையினை ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் வழங்குவார்.நினைவுப் பேருரையினை வடமாகாண விவசாய அபிவிருத்திக்கான கண்ணோட்டத்தில் வீட்டுத் தோட்டம் ஒரு விவசாய வனம் என்னும் தலைப்பில் கலாநிதி சிவமதி சிவச்சந்திரன் வழங்குவார்.

நன்றியுரையினை நடராஜா ரவிராஜின் நினைவுதின ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் ஆறுமுகம் தில்லைநாதன் வழங்குவார். அகவணக்கம், ஈகைச்சுடரேற்றல், மலர் மாலை அணிவித்தல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (48)

# மிருதங்க அரங்கேற்றம்

(மானிப்பாய்)

மொறட்டுவைப் பல்கலைக் கழக புதுமுக மாணவன் மகிழனின் மிருதங்க அரங்கேற்றம் இடம்பெறவுள்ளது.

இம் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணி முதல் நல்லூர் இளங்கலைஞர் மண்டப கலா அரங்கத்தில் இடம்பெறவுள்ளது. அரங்கேற்றம் காணும் மகிழன் விக்னேஸ்வரன் தாரணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் என்பதுடன் நல்லை கண்ணதாஸின் மிருதங்க மாணவனுமாவார்.

அரங்கேற்றத்தின் கலைஞர்களாக பாட்டினை சங்கீத வித்துவான் கருணாகரனும், கடத்தினை ஞானவேல் வசந்தும், தம்புராவை வர்ஜிகனும், முகர்சிங்கை கலாவித்தகர் சதீஸ குமாரும், கஞ்சிராவை பிரம்மஸ்ரீ சிவசுந்தரசர்மாவும், வயலினை முதுமெய்யியல் மாணி குகபரனும் அணிசெய்யவுள்ளனர்.(48)

# இலவசக் கல்விக்கருத்தரங்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில்

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் ஏற்பாட்டில் இவ்வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிற்கான இலவச கல்விக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன. கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிற்கான இரண்டு நாட்கள் கொண்ட செயலமர்வு முதலில் இடம்பெறவுள்ளது.

பிரதேச எல்லைக்குட்பட்ட அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் இச் செயற்திட்டமானது முன்னெடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்குகள் எதிர்வரும் 15.11.2013 வெள்ளிக்கிழமை முதல் 22.11.2013 வரை தொடர்ச்சியாக பிரதேசத்தின் பல்வேறு இடங்களில் இடம்பெறவுள்ளன. இதன் முதற்கட்டமாக பண்டத்தரிப்பு பிரதேச மாணவர்களின் நன்மை க்ருதி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் முதலாவது கருத்தரங்கு 15.11.2013 காலை 9.00 மணி முதல் இடம்பெறவுள்ளது.இக் கருத்தரங்கில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, பிரான்பற்று கலைமகள் வித்தியாசாலை, பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குகொள்ளவுள்ளனர். தொடர்ந்து கருத்தரங்கு இடம்பெறும் இடங்கள் தொடர்பாக அறிவிக்கப்படும் எனவும், இக் கருத்தரங்கினை முன்னெடுப் பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (48)

# சபுகஸ்கந்த ஆலைக்கு ஓய்வு பின்னணியில் நடந்தது என்ன?

## அமெரிக்க அழுத்தம் காரணமா?



அமெரிக்கா விடுத்த கடுமையான எச்சரிக்கைக்கு பணிந்து ஈரானிடம் இரகசியமாக எண்ணெய் கொள்வனவு செய்வதை அரசாங்கம் நிறுத்தியுள்ளது. இதன் காரணமாக சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் மூடப்பட்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளை மீறும் வகையில், மூன்றாவது தரப்பு ஒன்றின் ஊடாக, ஈரானிய எண்ணெயை அரசு கொள்வனவு செய்து வந்தது.

இதுபற்றிய புலனாய்வுத் தகவல் அமெரிக்காவுக்கு கிடைத்ததை அடுத்து, அண்மையில் அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் அலரி மாளிகையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்து கடுமையான எச்சரிக்கை விடுக்கும் இராஜாங்கத் திணைக்களத்தின் செய்தியை கையளித்திருந்தார்.

அச்செய்தியில், ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதை நிறுத்திக் கொள்ளாவிடின் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதனால், ஈரானிய எண்ணெயை மட்டும் சுத்திகரிக்கும் வசதியைக் கொண்டுள்ள, சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு ஆலை மூடப்பட்டுள்ளதுடன், சிறிலங்காவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

இதையடுத்து, கடந்த மாதம் 19ஆம் மற்றும், 27ஆம் நாள்களில் இலங்கைக்குப் புறப்படவிருந்த இரண்டு எண்ணெய்க் கப்பல்களை இலங்கை நிராகரித்துள்ளது.

கொழும்புத் துறை முகத்துக்கு வரவேண்டிய 180 ஆயிரம் மெட்றிக் தொன், எண்ணெய் ஏற்றிய கப்பல் தொழில் நுட்பக் கோளாறினால், கொழும்பு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் சபுகஸ்கந்தை சுத்திகரிப்பு ஆலையை மூன்று நாட்கள் மூடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மசகு எண்ணெய் இறக்குமதியில் ஏற்பட்ட தாமதமே சுத்திகரிப்பு நிலையத்தை திடீரென மூடக் காரணம் என பெற்றோலிய வள அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

20 நாட்களுக்கு முன்னதாகவே மசகு எண்ணெய் கப்பலொன்று இலங்கைக்கு வரவிருந்த போதிலும், குறித்த கப்பலின் வருகை தாமதமானதாகக் கு[illegible] பிட்டுள்ளார்.

குறித்த காலப்பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, பெற்றோலிய வளத் திணைக்களத்தில் நிலவி வரும் ஊழல் மோசடிகளினால் இவ்வாறு அடிக்கடி சுத்திகரிப்பு நிலையத்தை மூட வேண்டியிருப்பதாக தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

# சர்வதேச நீதிமன்றத்திடம் போர்குற்ற ஆதாரங்களை சமர்ப்பிக்கலாம்



சனல்-4 காணொளியை மட்டும் வைத்துக் கொண்டு யுத்தக்குற்றச் சாட்டுக்களை நிரூபிக்க முடியாது உண்மையான ஆதாரங்கள் இருந்தால் சர்வதேச நீதிமன்றில் சமர்ப்பிக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். எதிர்வரும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை சீர்குலைக்கும் தீவிர முனைப்பில் பிரித்தானிய தமிழ்ப் புலம்பெயர் அமைப்பு ஒன்று ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். க்ளோபல் தமிழ் போரம், பிரித்தானிய தமிழர் பேரவை மற்றும் இனச் சுத்திகரிப்பிற்கு எதிரான தமிழர் அமைப்பு ஆகியன பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனை சந்தித்தமை தொடர்பில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார. அமர்வுகளை புறக்கணிக்குமாறு புலி ஆதரவு தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் பிரதமரை கோரி வருவதாகத் தெரிவித்துள்ளார். யுத்தக் குற்றச் செயல் குறித்து சனல்4 ஊடகம் ஆவணப்படங்களை வெளியிட்டு வருவதாகவும், மெய்யாகவே ஆதாரங்கள் இருந்தால் அவற்றை பிரித்தானியா அல்லது வேறு ஐரோப்பிய நீதிமன்றமொன்றில் சமர்ப்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அல்லது ஜெனிவா அல்லது ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றங்களில் ஆதாரங்களுடன் குற்றச் சாட்டுக்களை சமர்ப்பிக்க முடியும் அவ்வாறு செய்ய முடியாவிட்டால் வாய்களை மூடிக் கொண்டிருக்க வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் இலங்கையில் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆதாரங்கள் பற்றிய தகவல்களை 2031ஆம் ஆண்டு வரையில் வெளியிட முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மெய்யாகவே ஆதாரங்கள் இருந்தால் அவற்றை காலம் தாழ்த்தாது சமர்ப்பிக்க முடியும் என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஒருபோதும் ஏற்படாது

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை என இலங்கை பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிக அடிப்படையில் மூடப்பட்டுள்ளது. எனினும், சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்ட காரணத்தினால் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்ள போதியளவு மசகு எண்ணெய் இல்லாத காரணத்தினால் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளது. மசகு எண்ணெய் கப்பல் உரிய நேரத்தில் நாட்டுக்குள் வராமையே இதற்கான காரணம் என பெற்றோலிய வளத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# சிகிரியாவில் ஆய்வு புராதன மண்பானை மீட்பு

சிகிரியா நுழைவாயிலின் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது, மன்னர் காசிப்பர் காலத்துக்கு உரியது என நம்பப்படும் மண் பானை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த தினங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்சியின் போது இது மீட்கப்பட்டுள்ளது. இந்த பானை மண்ணால் நிரப்பப்பட்டுள்ளது.

இதன் நிறை 20 கிலோ என்று தெரிவிக்கப்படுகிறது. இதனை மேலதிக ஆய்வுக்கு உட்படுத்த விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

❖ கீழேயுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையை அவதானித்து அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படுக.

| 1 2 5 A 8 K E 7 J 6 M 8 A 3 5 K 8 S 9 N P 4 9 |
|---|

29. மூன்றாவது தடவையாக வரும் 8 ஐ சுற்றி வட்டமிடுக.

30. முக்கோண எண்களை சுற்றி முக்கோணம் வரைக.

31. ஆங்கில அரிச்சுவட்டில் உள்ள 13வது எழுத்தின் கீழ் கோடிடுக.


❖ இடைவெளிக்கு பொருத்தமான சொற்களை தெரிந்து எழுதுக.

32. நாட்டார் பாடல்கள் படித்தவர்களுக்கு மட்டுமன்றி ..................... மக்களுக்கும் இலகுவில் புரியக்கூடியவை ( பாமர, கிராம, பண்டைய)

33. காந்தியடிகள் ஏழைமக்களின் வாழ்க்கையை உயர்த்த ..................... கொண்டார். (ஆலோசனை, திடசங்கற்பம், விகடம்)

34. நாதனும், காதரும் ..................... நண்பர்கள் (உடன்பிறந்த, தீவிரமான, இணைபிரியாத)

❖ சிற்றுண்டிச்சாலை ஒன்றில் உள்ள சிற்றுண்டிகளின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது அதன்படி கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.




35. சிற்றுண்டிச்சாலையில் உள்ள மோதகத்தின் எண்ணிக்கை 34 எனின் அங்குள்ள வடைகளின் எண்ணிக்கை யாது? ..................

36. லட்டு ஒன்றின் விலை 12 ரூபா 50 சதம் எனின் லட்டு விற்பதன் மூலம் கிடைக்கும் மொத்தப்பணம் யாது? ..................

37. சிற்றுண்டிச்சாலையில் உள்ள மொத்த சிற்றுண்டிகளின் எண்ணிக்கை யாது? ..................

❖ கட்டத்தில் உள்ள சொற்களை அவதானித்து 38முதல் 40வரையிலான வினாக்களுக்குரிய விடையின் கீழ் கோடிடுக.

| | | | |
|---|---|---|---|
| A நீர் | B துணி | C இரும்பு | D வெள்ளி |
| E பலகை | F இரசம் | G கடதாசி | H எண்ணெய் |

38. உலோகங்களை குறிக்கும் விடையை தெரிவு செய்க.
1. A.D.E 2. B.E.H 3. C.D.F

39. அல்லுலோகங்களை குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் எவை?
1. C.G.H 2. B.E.G 3. A.F.G

40. திரவ நிலையில் உள்ளவற்றை குறிக்கும் எழுத்துக்கள் எவை?
1. A.F.H 2. C.F.G 3. A.D.G



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு



❖ 1ஆம், 2ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட படத்துடன் தொடர்புடைய மூன்று சொற்கள் அடங்கிய விடையை தெரிவு செய்க.


01. 


1. வெளிச்சம் இயற்கைஒளி தங்குதன்இழை
2. மின்சாரம் வெப்பம் ஒளி
3. ஒலி விரயம் நட்டம்

02. 

1. இரவு பௌர்ணமி கடற்கரை
2. சூரியன் அழகு மதியம்
3. தோப்பு வானம் கருமுகில்

❖ முதலிரு படங்களினதும் தொடர்பினை அவதானித்து மூன்றாவது படத்திற்கு பொருத்தமாக அமைய வேண்டிய உருவை தெரிவு செய்க.

03. 

04. 

❖ தரப்பட்ட நிகழ்வை ஒழுங்குமுறையாக காட்டும் விடையின் கீழ் கோடிடுக.

05. A - இல்லை அது காலி செல்லும் புகையிரதம்
B - நீங்கள் இருவரும் அந்த ஆசனத்தில் அமருங்கள்
C - வவுனியா புகையிரதம் வரும் நேரமாகி விட்டது
D - இது தான் வவுனியா செல்லும் புகையிரதம்
E - அதோ வவுனியா புகையிரதம் வருகிறது.
1. B D E A C 2. C E A D B 3. D A B C E

❖ ஒரு வகுப்பில் உள்ள நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஜானகி - 16.03.2001 | வாசுகி - 24.01.2002 | ரேவதி - 06.10.2001 | புவிதா - 31.07.2001 |
|---|---|---|---|

06. இதன்படி வயதில் குறைந்தவர் யார்?
1. ஜானகி 2. புவிதா 3. வாசுகி

07. இதற்கு ஏற்ப சரியான கூற்று.
1. புவிதாவை விட ஜானகி மூத்தவள்
2. ரேவதியை விட வாசுகி மூத்தவள்
3. ரேவதியை விட புவிதா இளையவள்

❖ **வீதியோரம் ஒன்றில் சமதூர இடைவெளியில் A,B,C, என்னும் ஐந்து தூண்கள் நடப்பட்ட விபரம் கீழே தரப்பட்டுள்ளது.**

B, E தூண்களுக்கு சரிநடுவே D நடப்பட்டுள்ளது.
D, C தூண்களுக்கு சரிநடுவே E நடப்பட்டுள்ளது.
A, D தூண்களுக்கு சரிநடுவே B நடப்பட்டுள்ளது.

08.. இதன்படி சரியான கூற்று
1. C க்கு மிகஅருகில் இருப்பது A அல்லது D
2. B க்கு மிக அருகில் இருப்பது E அல்லது C
3. D தூணுக்கு மிக அருகில் இருப்பது B அல்லது E

09. மேலே உள்ள விபரங்களின் படி பிழையான கூற்று
1. A,D நகரங்களுக்கிடையிலான தூரமும் E,C, நகரங்களுக்கு இடையிலான தூரமும் சமனாகும்.
2. B,D நகரங்களுக்கிடையிலான தூரமும் E,C நகரங்களுக்கு இடையிலான தூரம் சமனாகும்.
3. A,B நகரங்களுக்கிடையிலான தூரத்தைப் போல் இரண்டு மடங்கு B,Dக்கு இடையிலான தூரம்.

10. தரப்பட்ட படங்களில் பிழையான கருத்து இடம்பெறும் படத்தை தெரிந்து அதன் கீழ்கோடிடுக.





11. 

இக்குறியீடு உணர்த்துவது
1. சிற்றுண்டிச்சாலை
2. உணவு உண்ணத்தடை
3. உபகரணங்கள் கொண்டு செல்லத்தடை


❖ **12தொடக்கம் 16 வரையிலான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக**

12. A பெட்டியிலும் B பெட்டியிலும் உள்ள பந்துகளின் எண்ணிக்கை 124 ஆகும். A,B,C, ஆகிய மூன்று பெட்டிகளிலும் உள்ள பந்துகளின் எண்ணிக்கை 163 எனின் C பெட்டியில் உள்ள பந்துகளின் எண்ணிக்கை யாது?
.............................

13. என்னிடம் 68 முத்திரைகள் உள்ளன. அவற்றில் $\frac{1}{4}$ பங்கு முத்திரைகள் வெளிநாட்டு முத்திரைகள் எனின் என்னிடமுள்ள உள்நாட்டு முத்திரைகள் எத்தனை?
.............................


14. 


இதன்படி ஏதேனும் ஒருமொழியை மாத்திரம் பேசக்கூடியவர்கள் எத்தனை பேர்?
.............................


15. 


தரப்பட்ட ஞாயிற்றுத்தொகுதியில் B யினால் குறிக்கப்படும் கோள் எது?
.............................



16. 



?- இக்குறி இடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய எண் யாது?
.............................

17. 

தரப்பட்ட சதுரத்தின் பரப்பளவு 64 சதுர cm ஆகும். நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
1. $48cm^2$ 2. $36cm^2$ 3. $24cm^2$

18. கடிகாரம் ஒன்றில் நிமிடமுள் 6 தடவைகள் சுழலும் போது மணித்தியாலமுள் எத்தனை தடவை சுழலும்?
1. 1 வட்டம் 2. ¼ வட்டம் 3. ½ வட்டம்

19. பொருள் ஒன்றின் விலை KMPS.LL என குறிக்கப்பட்டிருந்தது பொருளின் விலையாக இருக்கக்கூடியது?
1. 1545.00 2. 1245.00 3. 2125.00

20. 

தராசில் உள்ள நிறைகளின்படி ○ இவ்வுருவின் நிறை யாது?
1. 1kg 2. 500g 3. 750g

ராதா, நிர்மலா, சங்கவி, சியானி, ஆகியோர் சகோதரர்கள் ஆவர். இவர்களில் சியானியை விட நிர்மலா மூத்தவள் எனினும் சங்கவியை விட இளையவள் நிர்மலாவிற்கு ஒரு அக்காவும் இரண்டு தங்கைகளும் உள்ளனர்.

21. **இவர்களின் மூத்த பிள்ளை யார்?**
1. சங்கவி 2. ராதா 3. நிர்மலா

22. இவர்களில் வயதில் குறைந்தவர்கள் யார்?
1. ராதா 2. நிர்மலா 3. சங்கவி

❖ **வாகனதரிப்பிடத்தில் உள்ள வாகனங்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.**

| | | |
|---|---|---|
| மேட்டார் சைக்கிள்கள் - 23<br>கறுப்புநிற மோட்டார் சைக்கிள்கள் - 12 | முச்சக்கர வண்டிகள் - 10<br>மஞ்சள்நிற முச்சக்கரவண்டிகள் - 4 | மோட்டார் சைக்கிள்களும், முச்சக்கரவண்டிகளும் அல்லாத வாகனங்கள் - 17 |

23. வாகன தரிப்பிடத்தில் உள்ள மோட்டார் சைக்கிள்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1. 23 2. 35 3. 44

24. மஞ்சள் நிறமில்லாத முச்சக்கரவண்டிகள் எத்தனை?
1. 4 2. 6 3. 14

25. தரிப்பிடத்தில் உள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1. 64 2. 66 3. 50

❖ **கீழேயுள்ள சொற்கூட்டம் உணர்த்தும் தனிச்சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

26. வறட்சியான காலங்களில் தார்வீதிகளில் தொலைவில் நீர்போல் தெரிவது
(கானல்நீர், பாலைவனநீர், வெந்நீர்)

27. கோட்டை மதிலை சுற்றி அமைக்கப்படும் நீர் நிலை
(ஓடை, மடைக்கதவு, அகழி)

28. அகழ்வுத்தொழிலில் மாணிக்ககல், துகல்களை போடும் கூடை
(நாம்புவ, அத்தாங்கு, மடி)

# அடுத்த வருடத்தின் இறுதிக்குள் கோழி முட்டை உற்பத்தியில் தன்னிறைவு

## இறக்குமதியை நிறுத்தவும் திட்டம்



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் திவிநெகும தேசியத் திட்டத்தின் ஒருபகுதி யாக கோழி முட்டை உற்பத்தி அடுத்த வருடம் தன்னிறைவு காணுமெனவும், இதனால் கோழி முட்டை இறக்குமதியை நிறுத்துவதற்கும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

வாரமொன்றில் ஒருவர் 3 முட்டைகளை உண்ண வேண்டு மென மருத்துவர்கள் அறிவுறுத் தியுள்ளனர். இதன்படி 330 மில்லியன் முட்டைகளை உற் பத்தி செய்ய எதிர்பார்க்கப்படு கிறது. கோழிப்பண்ணையாளர் களுக்கு 10 ஒரு மாத குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி 1.1 மில்லியன் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று கடந்த மாதம் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் திவிநெகும பயனாளிகளுக்கு ஆறு இலட்சம் கோழிகள 300 மில்லியன் ரூபா செலவில் வழங் கப்பட்டுள்ளன. திவிநெகும திட் டத்தின் மூலம் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் 4329 மில்லியன் ரூபா செலவிடுவ தற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கோழிவளர்ப்பில் நுவரெ லியா, குருநாகல் மாவட்ட மக் களே அதிக ஆர்வம் காட்டுவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாகாண சபையை சரிவர பயன்படுத்துவது குறித்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண முகாமைத்துவ சம்மேளனத்தின் அனுசரணை யில் யாழ்ப்பாணத்தில் இன்று வடக்கு மாகாணசபை தொடர் பான முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியின் சங்கிலியன் சிலைக்கு அருகில் அமைந்துள்ள யூரோ வில் மாநாட்டு மண்டபத்தில் இன்று மாலை 4.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை இக் கலந்துரையாடல் இடம் பெறும்.

கிடைத்திருக்கும் வடக்கு மாகாணசபையை எப்படி சரி வரப் பயன்படுத்துவது என்பது குறித்த திட்டக் கலந்துரை யாடலாக இக்கலந்துரையாடல் இடம்பெறும்.

இக்கலந்துரையாடலில் அகி லன் கதிர்காமர், கிருஸ்னானந் தன், சிவசுப்பிரமணியம் உட்பட மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

## மருதனார் மடத்தில் தொடரும் திருட்டு

யாழ். காங்கேசன்துறை மருதனார்மடம் சந்தியிலுள்ள தொலைத்தொடர்பு நிலைய மொன்றிலிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் திருட்டுப் போயுள்ளன.

கடந்த வியாழக்கிழமை காலை தொலைத்தொடர்பு நிலையத் திற்குச் சென்ற அதன் உரிமையாளர், தொலைத் தொடர்பு நிலையத்தின் கூரை பிரிக்கப்பட்டிருப்பதை அவ தானித்துள்ளார். மேலும், அங் கிருந்த 47 கையடக்கத் தொலை பேசிகள் திருட்டுப்போயுள்ள தையும் அவர் அவதானித்துள் ளார். இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் முறைப் பாடு செய்துள்ள நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

அண்மையில் மருதனார்மடம் சந்திக்கருகாமையில் மூன்று வர்த்தக நிலையங்கள் உடைக் கப்பட்டு பெறுமதியான பொருட் கள் திருடப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## சேவாலங்கா நிறுவனத்தால் உட்கட்டுமான வேலைகள்

மீள்குடியேற்றப்பட்ட கிளி நொச்சி முகமாலை வடக்குப் பகுதியில் பல்வேறு உட்கட்டுமான வேலைகளையும் வாழ்வாதார வேலைத் திட்டங்களையும் சேவா லங்கா நிறுவனம் மேற் கொண்டு வருகின்றது .

கடந்த கால யுத்தம் காரண மாக இடம்பெயர்ந்து முகமாலை வடக்குப் பகுதியில் கடந்த ஜன வரி முதல் மக்கள் மீள்குடிய மர்விற்கு அனுமதிக்கப்பட்டுத் தற்போது நூறு வரையான குடும்பங்கள் மீள்குடியேறி யுள்ளன .

இந்த நிலையில் இப்பகுதி யில் உட்கட்டுமான வேலை களை மேற்கொண்டு வரும் சேவா லங்கா நிறுவனம் 85 குடும் பங்களுக்கான தற்காலிக வீடுகளை அமைத்து வழங்கி யுள்ளது.இதனைவிட 35 குடும் பங்களுக்கு நிரந்தர மலசல கூடங் களையும் அமைத்துக் கொடுத்துள்ளது. அத்துடன் 40 குடும்பங்களின் வாழ்வாதா ரத்தை முன்னேற்றும் வகையில் காசுக் கான வேலைத்திட்டத் தினையும் மேற்கொண்டுள்ளது.

இதனைவிட 12 தனியார் கிண றுகளையும் துப்புரவு செய்துள் ளது. இக்கிராமத்தில் 5 கிலோ மீற்றர் நீளமான வீதியொன்றி னையும் இந்த அமைப்பு தற்கா லிகமாகப் புனரமைப்பு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பாலியல் வன்புணர்வு நபருக்கு சிறை

மாங்குளம் பிரதேசத்தில் வீடு ஒன்றினுள் உட்புகுந்து பெண் ணொருவரை பாலியல் வல்லுற வுக்குட்படுத்த எத்தனித்த நபர் ஒருவருக்கு ஒருவருடக் கடுழி யச் சிறைத்தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்தார்.

மேற்படி திருகோணமலை யைச் சேர்ந்த இந்த நபர் வேலை நிமிர்த்தம் முல்லைத்தீவு பகுதி யில் இருந்த வேளை தான் தங்கி யிருந்த வீட்டுப் பெண்ணை பலாத்காரம் செய்ய முற்பட்ட வேளையில் பொதுமக்களினால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். (170)

## நற்கருணை புதுமைகள் கண்காட்சி ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

நற்கருணைப் புதுமைகள் எனும் தொணிப்பொருளிலான மூன்று நாள் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை யாழ்.மறைக் கல்வி நடுநிலையத்தில் ஆரம் பித்து வைக்கப்பட்டது.

யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம் அவர் களின் வேண்டுகோளிற்கிணங்க கொழும்பு உயர்மறை மாவட்டத் தில் நடைபெற்ற இந்தக் கண் காட்சி யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியினை ஆயர் இல்ல நிதிமுகாமையாளா அருட்பணி ஜெ.பி. அன்ரனி தாஸ் திறந்துவைத்தார். யாழ். மறை மாவட்டத்தின் ஏனைய மறைக் கோட்டங்களான இள வாலை, பருத்தித்துறை, ஊர்காற் றுறை, கிளி.முல்லை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் இக் கண்காட்சி இடம் பெறவுள் ளது. கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகிய இந்தக் கண் காட்சியினை பெருமளவு மாண வர்கள் பார்வையிட்டுச் செல்வ தனை அவதானிக்க முடிந்தது இந்தச் கண்காட்சி நேற்றுடன் முடிவடைந்துள்ளது. (பா)

## முல்லை கரைத்துறைப்பற்றில் கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கரைதுறைப் பற்று பிரதேச சபைக்குட்பட்ட முள்ளியவளை மற்றும் தண்ணீ ரூற்று ஆகிய பகுதிகளிலுள்ள கட்டாக்காலி மாடுகளை பிடிக் கும் நடவடிக்கை கடந்த புதன் கிழமை இரவு முதல் ஆரம்பிக் கப்பட்டுள்ளது என பிரதேச சபையின் செயலாளர் எஸ்.ரவீந் தரநாதன் தெரிவித்தார்.

வீதியோரங்களில் தரித்து நிற்கும் மாடுகளையும் கன்று களையும் உரிய முறையில் பாதுகாப்பாக வளர்க்குமாறு கடந்த மாதம் முதல் ஒலிபெ ருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு மாடுகள் இரவு நேரங்களில் வீதியோரங்களில் தரித்து நிற்பது மற்றும் படுத் துறங்குவது என்பனவற்றினால் அடிக்கடி விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என அவர் தெரிவித்தார்.

எனவே இரவு நேரங்களில் வீதியோரங்களில் சுற்றித்திரியும் மற்றும் படுத்துறங்கும் மாடுகளை கடந்த மாதம் முதல் முல்லைத் தீவு நகரிலும், புதன்கிழமை முதல் முள்ளியவளை பிரதே சங்களிலும் பிடிக்கும் நடவ டிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.ரவீந்தரநாதன் குறிப்பிட்டார்.

இவ்வாறு சபையினால் பிடிக்கப்படும மாடுகளுக்கு குறித்த மாட்டின் உரிமையா ளர்கள் 1,000 ரூபாவை தண்டப் பணமாக செலுத்திய பின்னரே கொண்டுசெல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## "லீசிங்" கட்டத் தவறியதால் 7 ஆட்டோக்கள் பறிமுதல்



குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட முச் சக்கரவண்டிகளுக்கான மாதா நதக் கட்டணத்தை செலுத்தத் தவ றியதாகக் கூறப்படும் முச்சக் கரவண்டி உரிமையாளர்கள் 7 பேரிடமிருந்து முச்சக்கரவண்டி களை யாழ். குற்றத்தடுப்பு பொலிஸார் பறிமுதல் செய் துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். குற் றத்தடுப்பு பொலிஸ் நிலை யத்தில் யாழ். நகரப்பகுதியில் உள்ள பிரபல குத்தகை வழங் கும் கம்பனியின் நிர்வாகி முறைப்பாடு செய்தார். இதனைத தொடர்ந்து குத்தகை அடிப் படையில் கொள்வனவு செய் யப்பட்டு மாதாந்தக் கட்டணம் செலுத்தத் தவறியதாகக் கூறப்படும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் 7 பேரிட மிருந்து முச்சக்கரவண்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் முச்சக்கர வண்டிகளை குத்தகை அடிப் படையில் வாங்கியவர்கள் தெரிவிக்கையில்,

இடைத் தரகர்களின் ஊடாக முச்சக்கரவண்டிகளை குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்து பல மாதங்களாக தொடர்ந்து குத்தகைக் கட்டணங் களைச் செலுத்தியிருந்திருந் ததாகவும் கூறினர். இருப்பினும் தற்போது முச்சக்கரவண்டிகளை வாடகைக்கு அமர்த்துபவர்கள் குறைவாகக் காணப்படுகின்ற மையால் குத்தகைக் கட்ட ணத்தை உரிய தவணையில் செலுத்த முடியாமல் போயுள்ளது.

மேலும், கடந்த புதன்கிழமை குத்தகைக்கட் டணம் செலுத்தப் பட்டிருந்த முச்சக்கரவண்டிகளை யும் பொலிஸார் பறிமுதல் செய் துள்ளதாகவும் முச்சக்கரவண் டிகளை குத்தகை அடிப்படை யில் வாங்கியவர்கள் தெரிவித் தனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவிக்கையில்,

மேற்படி 7 முச்சக்கரவண்டி உரிமையாளர்களும் குத்தகை அடிப்படையில் வாங்கியிருந்த முச்சக்கரவண்டிகளை வேறு நபர்களிடம் விற்பனை செய்து பணம் பெற்றுள்ளதாகவும் அதற் கான உரிய குத்தகைக் கட்ட ணங்களை பல மாதங்களாகச் செலுத்தவில்லை எனவும் யாழ். நகரப்பகுதியில் உள்ள பிரபல குத்தகை வழங்கும் கம்பனியின் நிர்வாகி முறைப்பாடு செய்த தாகக் கூறினர்.

இந்த நிலையில், குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய யப்பட்ட முச்சக்கரவண் டிகளுக கான மாதாந்தக் கட்டணத்தை செலுத்தத் தவறியதாகக் கூறப் படும் முச்சக்கரவண்டி உரிமை யாளர்கள் 7 பேரிடமிருந்து தாங் கள் முச்சக்கரவண்டிகளை பறி முதல் செய்ததாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். (25)

# இந்திய படையில் பாகிஸ்தான் உளவாளி




2008ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் சம்பவத்துக்கு இந்திய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் தான் பாகிஸ்தான் உளவுப் பிரிவுக்கு தகவல்கள் அளித்ததாக பிரிட்டிஷ் பத்திரிகையாளர்கள் எழுதிய புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மும்பை தாக்குதல் சம்பவம் தொடர்பாக "தி சீஜ்" என்ற புத்தகத்தை பிரிட்டிஷ் பத்திரிகையாளர்கள் இருவர் எழுதியுள்ளனர்.

அதில், "அமெரிக்காவைச் சேர்ந்த ஹெட்லிக்கு பாகிஸ்தான் உளவுப் படையான ஐ.எல்.ஐ. அமைப்பு இரண்டு ஆண்டுகள் கண்காணிப்பு பயிற்சி அளித்துள்ளது.

அப்போது, ஐ.எஸ்.ஐ. அமைப்பின் தலைவர் இக்பால், "டெல்லியிலுள்ள நமது உளவாளி "ஹனி பீ" அனைத்து உதவிகளையும் செய்வார் என்று ஹெட்லியிடம் கூறிவந்தார்.

அந்த உளவாளிதான் இந்திய இராணுவம், காவல்துறையினர் பெற்ற பயிற்சிகளின் விவரங்களை ஐ.எஸ்.ஐ.க்கு தெரிவித்தார். மேலும், தாக்குதல் நடைபெற்ற தினத்தன்று, தெற்கு மும்பை கடலோரத்தில் அமைந்துள்ள பத்வர் பார்க் மீனவர் காலணியில் பயங்கரவாதிகள் வந்து இறங்க வேண்டும் என்பதை முடிவு செய்தார் என்று அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வறுமையில் வாடும் இளவரசி




மியான்மரை ஆட்சி செய்து வந்த இளவரசி தற்போது வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்.

மியான்மரில் மன்னர் ஆட்சி இருந்த காலகட்டத்தில், திபா என்பவர் கடைசி மன்னராக இருந்தார்.

ஆங்கிலேயர்களின் ஆட்சியின் போது கடந்த 1885ஆம் ஆண்டில் இவரது அதிகாரம் பறிக்கப்பட்டது.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு மியான்மரில் இரா்ணுவ ஆட்சி ஏற்பட்டது.அதையடுத்து மன்னர் பரம்பரை ஒழிக்கப்பட்டு அவர்களது குடும்பத்தினர் சாதாரண குடி மகன்களாக்கப்பட்டனர்.

அந்த வழியில் வந்த கடைசி இளவரசி ஆக ஹிடெக் சுபாயா ஜி என்பவர் இன்னும் உயிர் வாழ்கிறார், அவருக்கு 90 வயது ஆகிறது.

தற்போது யங்கூன் நகரில் ஒரு குடிசை வீட்டில் வறுமையில் வாழ்கிறார். 60 ஆண்டுகளுக்கு முன்பு இளவரசியாக வலம் வந்த இவர் தற்போது அண்டை வீட்டாருக்கு கூட யார் என்று தெரியவில்லை.

ஓரளவு வசதியாக வாழ்ந்த தான் குடும்ப சண்டை காரணமாக பரம்பரை வீட்டை இழந்து தற்போது குடிசையில் வாழ்வதாகவும், இளவரசியாக வசதியுடன் வாழ்ந்ததை நினைத்து பொழுதை கழிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## சாதனைக்காக 50 மணிநேரம் தொலைபேசியில் பேசும் எச்.ஐ.வி. நோயாளி



உலக சாதனை படைக்கும் நோக்கில் தென்னாபிரிக்காவை சேர்ந்த எச்.ஐ.வி. கிருமி தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் தொடர்ந்து 50 மணி நேரமாக போனில் பேசிக் கொண்டுள்ளார்.

தலைநகர் பிரெட்டோரியாவின் தெற்கே உள்ள செண் சூரியன் நகரில் ஆண்ட்ரே வன் ஜிஜ்ல் (63) என்பவர் இந்த சாதனை முயற்சியை தொடங்கினார்.

தொடர்ந்து 50 மணி நேரமாக நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசிக் கொண்டிருக்கும் இவர், இதற்கு முன்னர் தொடர்ந்து 54 மணி நேரம் 4 நிமிடங்களுக்கு தொலைபேசியில் பேசிய முந்தைய உலக சாதனையை முறியடிப்பேன் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

எய்ட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை உலக மக்களிடையே ஏற்படுத்தவே இந்த சாதனை முயற்சி எனக் கூறும் இவர் கடந்த 30 ஆண்டுகளாக எச்.ஐ.வி. நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, தொடர்ந்து 13 நாட்கள் வெந்நீர் தொட்டியில் அமர்ந்திருந்தது, டிஸ்கோ இசைக் கேற்ப தொடர்ந்து 345 மணி நேரம் நடனம் ஆடியது உள்ளிட்ட 39 வகை அரிய சாதனைகளையும் செய்துள்ளதாக இவர் கூறுகிறார்.

உலகச் செய்திகள்

## கெட்ட வார்த்தைகளை அள்ளி வீசிய மேயர்



கனடாவில் பெரிய நகர மேயர் பேசிய கெட்ட வார்த்தைகள் அடங்கிய காணொளி வெளியாகியுள்ளது.

கைப்பேசி மூலம் எடுக்கப்பட்ட இந்த காணொளி இணையத்தளத்தில் வெளியாகி உள்ளது.

இதனை வாங்குவதற்கு ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகை 5,000 டொலர்கள் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்த காணொளியில் மேயர் கெட்ட வார்த்தைகளை பேசியுள்ளார் மேலும் யாரையோ கொலை செய்யப் போ[illegible]க பயமுறுத்துவதாகவும் பதிவாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## சிங்கப்பூர் பிரதமரின் இணையத்தளம் மீது தாக்குதல்



சிங்கப்பூர் பிரதமரின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீது ஊடுருவல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத குழு ஒன்று இணையத்தளத்தில் உள்ள தகவல்களில் மாற்றங்களை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இணையத்தளத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்படவில்லை என சிங்கப்பூர் பிரதமர் லீ ஹசின் லூங்கின் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை சிங்கப்பூர் அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

# தாயிடமிருந்து குழந்தைகளை பிரித்தது நீதிமன்றம்



பிரித்தானிய நீதிமன்றம் தாயிடமிருந்து இரட்டை குழந்தைகளை பிரித்து அதிசய தீர்ப்பை வழங்கியுள்ளது.

பிரித்தானியாவில் பெத்(வயது-29), அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த மருத்துவரான மைக்கல் (வயது-33) என்ற தம்பதியினருக்கு இரட்டை குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் இவர்களுக்குள் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக இருவரும் 8 மாதங்களுக்கு முன்னர் விவாகரத்து பெற்றனர்.

இரண்டு குழந்தைகளையும் தந்தையிடம் ஒப்படைத்ததோடு மட்டுமல்லாமல் 15 நாட்களுக்கு ஒரு முறை தாய் தனது குழந்தைகளை 20 மணிநேரம் தன்னுடன் வைத்து கொள்ளலாம் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்பானது அந்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ஊடகவியலாளர்கள், சமூக சேவகர்கள் போன்றோர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மேலும் குழந்தைகள் தாயின் பாசப் பராமரிப்பில் வளர வேண்டும் என்ற அடிப்படை உரிமையை அந்நாட்டு நீதிமன்றம் மீறியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## குண்டான இளைஞனுக்கு விமானத்தில் ஏற அனுமதி மறுப்பு

ஹார்மோன் பிரச்சினையால் உடல் பருமனான நோயாளியை விமானத்தில் ஏற்ற முடியாது என பிரிட்டிஷ் விமான நிறுவனம் மறுத்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னால் மருத்துவக் காரணங்களுக்காக பிரான்ஸ் நாட்டிலிருந்து கெவின் செனைஸ் என்ற இளைஞனும் அவனது பெற்றோரும் அமெரிக்கா சென்றனர்.

மேயோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கெவின், சிகிச்சை முடிந்ததும் தனது பெற்றோருடன் தங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்வதற்காக பிரிட்டிஷ் விமான நிறுவனத்தில் முன் பதிவு செய்திருந்தார். இந்நிலையில் 20 வயதான கெவினுக்கு உடலில் ஏற்பட்ட ஹார்மோன் கோளாறால் உடல் எடை கூடியது.

அதன் விளைவாக கெவினின் எடை 500 பவுண்டானதால் விமான பயணத்திற்கு பிரிட்டிஷ் விமான நிறுவனம் அனுமதி மறுத்துள்ளது.

மேலும் கெவினுக்கு எந்த நேரமும் மருத்துவ உதவியும் பிராணவாயுக் கருவியும் தேவைப்படும் என்பதால் பயணம் செய்யும்போது ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் சமாளிக்க முடியாது எனக் காரணம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஒரு வாரம் ஹோட்டலில் தங்கியிருந்த கெவினின் குடும்பம் மேற்கொண்டு செலவு செய்வதற்கு இயலாமல் ரயில் மூலம் நியூயோர்க் சென்று அங்கிருந்து கப்பல் மூலமாக பிரான்ஸ் செல்ல முடிவெடுத்துள்ளது.

# அமெரிக்காவில் துப்பாக்கியுடன் பாடசாலைக்கு வந்த மாணவன்

அமெரிக்காவின் /புளோரிடா மாநிலத்தில் 9 வயது மாணவன் ஒருவன் சக மாணவர்களிடம் காண்பிப்பதற்காக தோட்டாக்கள் நிரப்பப்பட்ட துப்பாக்கியை பாடசாலைக்கு எடுத்து வந்ததால் கைது செய்யப்பட்டான்.

கடந்த புதன்கிழமையன்று பாடசாலை வாகனத்தில் வந்த அந்த மாணவன் கையில் துப்பாக்கி வைத்திருப்பதைக் கண்ட வாகன ஓட்டுனர் உடனடியாக பாடசாலை நிர்வாகத்துக்கு தகவல் கொடுத்தார்.

பாடசாலை நிர்வாகம் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து, அங்கு வந்த பொலிஸார் அந்த மாணவனை கைது செய்தனர்.



விசாரணையின் போது முதலில் அந்த துப்பாக்கி தனது தாயுடையது என்றும், பின்னர் அந்தத் துப்பாக்கியை பூங்கா ஒன்றிலிருந்து கண்டெடுத்ததாகவும் முன்னுக்குப் பின் முரணாக அந்த மாணவன் பதிலளித்ததாகபொலிஸார்தெரிவித்தனர்.

# சந்திரசேகரப் பிள்ளையாரில் களவு போனது விக்கிரகங்கள்



(திருநெல்வேலி)

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலில் கடந்த வெள்ளி இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஐம்பொன்னிலான எழுந்தருளிப் பிள்ளையாரும் பஞ்சமுகப் பிள்ளையாரின் வெள்ளியிலான முடியும் திருடர்களால் களவாடப் பட்டுள்ளது.

கோவிலின் வடக்குப் பகுதி சுற்று மதிலின் மேலால் ஏறி கோவிலுக்குள் புகுந்த திருடர்கள் உட்பக்க மண்டப இரும்பிலான சுருக்குக் கதவையும் மரத்திலான கதவையும் கோவிலுக்குள் இருந்த இரும்புகள், தடிகளால் உடைத்து திறந்துள்ளனர்.

தெற்கு வாசல் கதவை உடைத்து திறக்க முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை. உட்பக்க வீதியில் கால் போத்தல் வெற்று சாராயப் போத்தலும் மூன்று குறை பீடித் துண்டுகளும் காணப்பட்டன.

இக்களவு பற்றி கோப்பாய் பொலிஸாரிடம் ஆலயக் குருக்களினால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு மோப்பநாயுடன் விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

திருடர்கள் ஏறி ஆலயத்துக்குள் புகுந்த வெளி சுற்றுமதிலில் காணப்பட்ட கால் அடையாளங்களை மோப்பம் பிடித்த பொலிஸ நாய் விரைந்து ஓடிச் சென்று ஆலயத்துக்கு அண்மையில் உள்ள சிறு குடிசை வீடொன்றுக்குள் நுழைந்து நின்றது.

அங்கிருந்த வீட்டுப் பெண்ணை பொலிஸார் விசாரித்தபோது தனது கணவன் வேலைக்குப் போய்விட்டதாக அவர் தெரிவித்தார். அவருக்கு தகவல் கொடுத்து அவரை பொலிஸ் நிலையம் வருமாறு பொலிஸார் கூறியுள்ளனர். (137)

# ஆட்டோ மோதி முதியவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கல்வியன்காட்டுப் பகுதியில் நேற்று பிற்பகல் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர் ஆட்டோ ஒன்றினால் மோதுண்டு தலையில் படுகாயமடைந்துள்ளதுடன், அவரை மோதிய ஆட்டோ அங்கிருந்து தப்பிச்சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்வியன்காட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபரான கிருஸ்ணபிள்ளை சிறிஸ்கந்தராசா (வயது - 61) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலையில் காயமடைந்து மயக்கமுற்ற நிலையில் உள்ள அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா,137)

# கம்பன் மழலைகளின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலைய கம்பன் மழலைகள் பூங்கா விளையாட்டு விழா இன்று இடம்பெறுகிறது.

தலைவர் கு.இராஜேஸ் மித்திரன் தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு மழலைகள் பூங்காவின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது இவ் விளையாட்டு விழாவில், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அம்பம் இரவீந்திரதாசன் கலந்துகொள்ளவுள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதான குடும்பஸ்தர் விடுதலை

(திருநெல்வேலி)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சியைச் சேர்ந்த மகாதேவன் ரமணதாஸ் (வயது - 40) என்பவர் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து இலங்கை இராணுவத்துக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியதாக 2009 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி கட்டுநாயக்கவில் வைத்து கைதுசெய்யப்பட்டார். 2013 ஆம் ஆண்டு மாசி மாதம் இவர் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவரால் வழங்கப்பட்டிருந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கமைய வழங்கப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவித்து கடந்த 23 ஆம் திகதி அதனை நிராகரித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காக வழங்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்றத்தில் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் இல்லை என அரச தரப்பினால் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரி இயங்கமுடியாத நிலையில் இருந்தமையினால் சிறைச்சாலையிலிருந்து அம்புலன்ஸ் வாகனம் மூலம் அவர் நீதிமன்றுக்கு ஸ்ரெட்சரில் வைத்து கூட்டி வரப்பட்டார். விடுதலையான பின்பு இலவச சேவையாக அம்புலன்ஸ் வண்டி மூலமே அவர் கிளிநொச்சி, வட்டக்கச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

எதிரி சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆஜரானார். அரச தரப்பில் அரச சட்டவாதி நளினி கந்தசாமி ஆஜரானார். (137)

## சைக்கிள் திருட்டு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியொன்று திருடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (66)

# முதியோர் தின விழா

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தின் சர்வதேச முதியோர் தின விழா இன்று நவாலி முருகானந்தா சனசமூக நிலையம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் கி.பௌலின் தலைமையில் மாலை 3.30 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுப்பிரமணியம் முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி நேசரட்ணம் செல்வகுமாரி வலி. தென்மேற்கு பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராசா நவாலி கிழக்கு கிராம அலுவலர் பி.நித்தியானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வலி.தென்மேற்கு முதியோர் சங்கங்களின் சமாசத் தலைவர் எம்.எக்ஸ்.சர்வானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் முதியோர்களின் விளையாட்டுக்களும் பாடல் போட்டிகள், சங்கீதக் கதிரை போன்ற போட்டிகளும் நடைபெற்று பரிசில்களும் வழங்கப்படும். (104)

## மாநாட்டில்...

என மத்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இலங்கை விஜயத்தின் போது இந்திய மீனவர் பிரச்சினை குறித்து பேசப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## பொதுநலவாய மாநாட்டில்...

கபில் சிபல், சல்மான் குர்ஷித், சோனியாவின் அரசியல் ஆலோசகர் அகமது பட்டேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில், கொமன்வெல்த் மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொண்டால், அது தமிழகத்தில் அரசியல் ரீதியாக பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கட்சியின் நலனைக் கருதி, தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்கும் வகையிலும் பிரதமர் அதில் கலந்து கொள்ளக் கூடாது என மூத்த அமைச்சர்கள் ஏ.கே.அன்ரனி, ப.சிதம்பரம் போன்றோர் கூறியதாக தெரிகிறது.

அதேபோன்று, பிரதமர் மன்மோகன்சிங் மாநாட்டில் கலந்து கொள்ளாவிட்டால் அது அனைத்துலக அளவில் குறிப்பாக கொமன்வெல்த் நாடுகளிடையே இந்தியாவின் நிலையை பாதிக்கும் என்றும் சல்மான் குர்ஷித் உள்ளிட்ட சிலர் குரல் எழுப்பினர்.

இதனால், இறுதி முடிவை எட்ட முடியாமல் குழப்பம் நீடித்ததாகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தக் கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரந்தீப் சிங் சுர்ஜேவாலா,

இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் நலனை மனத்தில் கொண்டு இறுதி முடிவு எடுக்கப்படும். தமிழகத்தில் எதிர்ப்பு தெரிவிக்கும் கட்சிகள் மற்றும் மக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பு அளிக்கப்படும்.

மேலும், தேச நலன் மற்றும் இலங்கைத் தமிழ் மக்கள் வாழும் வடக்கு மாகாணத்தில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட முதல்வரின் கருத்துகளும் கவனத்தில் கொள்ளப்படும்.

இந்தியாவில் உள்ள தமிழ் மக்களுக்கு, இலங்கையின் மனித உரிமை மீறல்கள் கவலைக்குரிய விடயமாக உள்ளது. தேச நலன் தான் அளவீடு. அதுதான் எல்லாவற்றுக்கும் மேலானது. அதையொட்டியே பிரதமர் முடிவெடுப்பார் என்று தெரிவித்துள்ளார்.

கொமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வலியுறுத்தி, பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளன. இது தமிழ்நாட்டில் கொந்தளிப்பை மேலும் அதிகரிக்கச் செய்யலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

இந்தநிலையில், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கொமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை என்றும் அவ்ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## பொதுநலவாய...

கொண்டாடும் கோமாளி மாநாடு. இதனால் அதில் கலந்து கொள்ளப் போவதில்லை என எமது கட்சி முடிவு செய்துள்ளது.

அத்துடன் இந்த மாநாடு தனி நபர் தலைவர் பதவியை பெறுவதற்காக நடத்தப்பட்டாலும் அதில் நாட்டு மக்களுக்கு எந்த பிரயோசனமுமில்லை.

பொதுநலவாய மாநாடு நாட்டு மக்களுக்கு ஐந்து சதத்திற்கும் உதவாத வெள்ளை யானை என்றார்.

## இளைப்பாறல்...

பிரதம குருக்கள் சுதாகரசர்மாவால் பூஜைவழிபாடுகள் நடாத்தி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பொதுமக்கள் உறவுகள் மற்றும் பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் ஹசேன் ஹேரத், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சுரேஸ், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சின்னையா சிவராசா (போல்) அமைச்சின் அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## எந்தவொரு...

இறையாண்மையுள்ள சுதந்திர நாடான இலங்கைக்கு பிரித்தானியப் பிரதமர் உண்மையில் அப்படியான அழுத்தங்களை கொடுத்தாரா என்பதை நான் அறியவில்லை என்றார்.

பிரித்தானிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகளை கடந்த வியாழக்கிழமை சந்தித்த பிரதமர் கமரூன், சுதந்திரமான விசாரணை நடத்த இலங்கை தவறினால் மட்டுமே சர்வதேச விசாரணை ஒன்று அவசியப்படும் என்று தெரிவித்திருந்தார் என பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில், பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு புறம்பாக தனிப்பட்ட விடயங்கள் கலந்துரையாடும் என்ற நோக்கமும் இல்லை என அமைச்சர் ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

## அரசியல்...

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் சார்பில் கலந்து கொள்ள உள்ள சார்ள்ஸ் வெளிநாட்டு ஊடகங்களிடம் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சில நாடுகள் பொதுநவாய நாடுகளின் மாநாட்டை அரசியல் கைப்பாவையாக பயன்படுத்த முயற்சித்தாலும் அந்த அமைப்பின் நோக்கம் அதனை விட விரிவானது எனவும் இளவரசர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கும் இந்த விடயங்களை வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்கும் இளவரசர் சார்ள்ஸ், பண்டாரநாயக்கவினருக்கு சொந்தமானதும் தற்பொழுது நவீன ஹோட்டலாக மாற்றியமைக்கப் பட்டுள்ளதுமான கொழும்பு றொஸ்மிட் பிளேசில் 65 ஆம் இலக்கத்தில் உள்ள டின்டெங்கல் ஹோட்டலில் தங்கவுள்ளார்.

# மக்களின் தேவைகளை அறிந்து தீர்வினை வழங்குபவர் சந்திரகுமார்

## கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு



கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களைத்தேடிச்சென்று அவர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் இனம்கண்டு தீர்வினைப்பெற்றுக் கொடுப்பவர் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்கள் மீள் குடியேற்ற காலம் தொடக்கம் அவர் மேற்கொண்டுவருகின்ற செயற்பாடுகள் காரணமாகவே பிரதேசங்களின் அபிவிருதியிலும் மக்களின் வாழ்நிலைகளிலும் கணிசமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன இதனால் கிளிநொச்சி மக்களின் தாகம் தீர்க்கும் ஒரு மனிதராகவே அவரைப் பார்கின்றோம் என நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னி கடற்றொழிலாளர் சங்கத்தலைவர் பசில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாச்சிக்குடாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துதெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

நாடாளுமன்றஉறுப்பினர் மு.சந்திரகுமார் கிளிநொச்சியில் சென்றுவராத பகுதிகளே இருக்கமுடியாது ஏனெனில் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களின் நிலைப்பாடுகளையும் அங்கு வாழ்கின்ற மக்களின் தேவைகளையும் அவர்களின் வாழ்வியல் நிலைமைகளையும் அவர் நன்கு அறிந்துவைத்துள்ளார் இதன் காரணமாக மக்களின் தேவைகளை நிவர்த்திசெய்கின்ற விடயத்தில் தீர்க்கமான முடிவுகளை எட்டுவதிலும் உதவித் திட்டங்களை நகர்த்துவதிலும் அவர் சிறப்பாக செயற்படுகின்றார். அத்தோடு மக்களின் தொழிற்துறைகள்,வாழ்வாதார மேம்பாடு போன்றவற்றிலும் அவர் அதிக அக்கறை செலுத்துபவாராக உள்ளார்.

இன்று மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் செயற்பாட்டினூடான நன்மைகளைப் பெறாத மனிதர்களே இருக்கமுடியாது அந்நத அளவுக்கு அவரின் சேவை பரந்து வியாபித்து நிற்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்

மேற்படி பிரதேசததில் தீயினால் முற்றாக எரிந்து போன வீட்டிற்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் அந்த குடும்பத்திற்கான உடனடி தேவைகளை நிறைவு செய்வதற்காக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு உடனடி தேவைகான நிதியினையும் வழங்கி வைத்தார்.

பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஜஸ்ரின் தலைமையில் நடைபெற்ற ,நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன், ஈபிடிபி யின் பூகரிப்பிரதேச அமைப்பாளர் நிர்மல றொபின்சன் மற்றும் மாதர் அபிவிருத்தி சங்கத் தலைவி விளையாட்டுக் கழகத்தினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இவரைக் கைது செய்வதற்கு கோரப்படுகிறது உதவி

(கொழும்பு)



நாடு முழுவதும் போலி நாணயத்தாள்களை அச்சிட்டு விநியோகித்த பிரதான சந்தேக நபரை கைது செய்வதற்கான உதவியை பொலிஸார் பொதுமக்களிடம் நாடியுள்ளனர்.

இதன்படி சுமார் ஏழு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டாயிரம் ரூபா நணயத்தாளை அச்சிட்டு புழக்கத்தில் விட்ட பிரதான சந்தேகநபர் பற்றிய தகவல்கள் பொலிஸாரால் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நபர் 973/16, பொதராவ வீதி, மாலம்பே என்ற முகவரியிலுள்ள வீட்டின் உரிமையாளரான ஹகம்மல்கொடலியனகே பண்துல குமார என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர் குறித்த தகவல்களை பொதுமக்கள் 0112422176, 0112326670 மற்றும் 0112320141-5 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு வழங்க முடியும். இதேவேளை 0112380380 என்ற தொலைநகல் இலங்கங்களுக்கும் தகவல்களை வழங்க முடியும் என குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நபரை காணும் அல்லது இந்த சந்தேகநபர் குறித்த தகவல்கள் அறிந்திருப்பின் பொலிஸாருக்கு வழங்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

# குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

மதுபோதையில் தூக்குமாட்டி இறந்ததாகத் தெரிவிக்கப்படும் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவரது சடலம் நேற்று முன்தினம் இரவு கோப்பாய் பொலிஸாரினால் யா்ழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையில் சுகாதாரப் பிரிவில் பணியாற்றி வந்த (நிரந்தரப் பணியாளர்) திருநெல்வேலி பாரதிபுரத்தைச் சேர்ந்த கண்முகம் தர்மராசா (வயது 39) என்பவரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் மது போதையில் இருந்த இவர் வீட்டில் தூக்குப் போட்டு தற்கொலை செய்யப்போவதாக பாசாங்கு செய்து வீட்டாரை பீதியடைய வைத்ததாகவும் இருந்தும நிஜமாகவே அவர் தூக்குமாட்டி இறந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையை அடுத்து சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# படையினர் வசமிருந்த காணிகள் உரியவர்களிடம் கையளிப்பு



யாழ். பருத்தித்துறை பகுதியில் 521ஆவது படைத்தலைமையகத்தின் கட்டுப்பாட்டிலிருந்த 50 வீடுகள் மற்றும் 22 காணிகள் நேற்றைய தினம் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

521ஆவது படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பாதுகாப்பு படைப்பிரிவின் 7ஆவது படைப்பிரிவினால் நேற்றுக் காலை இந்தகையளிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

521ஆவது படைப்பிரிவின் கேணல் டி.எம்.ரி.பி டிசாநாயக்க வீடுகள் மற்றும் காணிகள் கையளிப்பதற்கான அத்தாட்சி ஆவணத்தினை பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலனிடம் கையளித்தார்.

அதனைத்தொடர்ந்து, இராணுவ கட்டுப்பாட்டிற்குள் இருந்த வீதியும் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டன. மேற்படி கையளிக்கப்பட்ட வீடுகளை மக்கள் சென்று பார்வையிட்டனர்.

இந்நிகழ்வில், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சக்கோட்டை பகுதியில் கடமை புரியம் கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (01,25)

# குறைவடைந்து செல்லும் டெங்கு நோயின் தாக்கம்

கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் தர்ம வன்னிநாயக்க தெரிவிக்கையில்

கடந்த வருடத்தில் நவம்பர் மாதம் இரண்டாம் வாரம் வரையான காலப்பகுதியில் 38 ஆயிரம் பேர் டெங்கு தொற்றுக்கு ஆளாகியிருந்தனர். ஆனால் இந்த வருடத்தின் அதே காலப் பகுதியில் 26 ஆயிரத்து 805 பேரே பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கடந்த வருடம் டெங்குத் தொற்றினால் 180 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ் வருடத்தில் இதுவரை 70 பேரே உயிரிழந்துள்ளனர். கடந்த வருடம் மே மற்றும் யூன் மாதங்களில் முறையே 2550, 5955 பேர் டெங்குத் தொற்றினால் பாதிக்கப்பட்டனர்.

ஆனால் இவ்வருடம் குறித்த இரண்டு மாத காலப் பகுதியிலும் 2614, 2427 பேரே டெங்குத் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

சுகாதார அமைச்சு கடுமையாக அமுல்படுத்தும் நுளம்பு ஒழிப்பு வார செயற்திட்டமே டெங்கு தொற்று குறைவடைய காரணமெனவும அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பழுதடைந்தது “லிப்ற்” நோயாளர்கள் பாதிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் 27 ஆம் இலக்க விடுதிக்கான லிப்ற் பழுதடைந்ததன் காரணமாக நோயாளரை ஏறியிறக்கும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவ்வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் இந்த லிப்ற் பழுதடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை இந்த லிப்ற் பழுதடைந்திருப்பது சம்பந்தமாக வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனேகமாக இந்த லிப்ற் இன்று பழுது பார்க்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# வெளிநாட்டுத் தலைவர்களின் இணைப்பதிகாரிகளாக இராணுவம்

கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கும் வெளிநாட்டு அரசுத தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழுக்களுக்கான இணைப்பதிகாரிகளாக, 1600 இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை இராணுவ ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

327 அதிகாரிகளும், 1336 படையினருமாக மொத்தம், 1663இராணுவத்தினர் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழுக்களை வரவேற்று, அவர்களுக்கான வசதிகள், பயணங்கள் போன்றவற்றை ஒழுங்கமைக்கும் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள படையினரை, கடந்த வியாழன் சந்தித்த இராணுவத் தளபதி, விருந்தினர்களை திருபதிப்படுத்தும் வகையில் இணைப்பதிகாரிகளாக பணியாற்ற வேணடும் என்று அறிவுறுத்தியுள்ளார்.


நீங்களும் அறிவிப்பாளராகலாம்!

சர்வதேச இணைய வானொலி வாரணம்FM இன் ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சி நெறி
யாழ்ப்பாணத்தில் அடுத்த பிரிவு ஆரம்பம்!
தமிழில் சிறந்த உச்சரிப்பு, பேச்சாற்றல், இசைத்துறை, எழுதுதிறன், நடிப்பாற்றல், இதர கலைத்துறை ஆர்வலராயின்

ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சி நெறியில் இணைவதற்கு.....

1. க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தமிழ் விசேடசித்தியுடன் உயர்தரம் பல்கலைக்கழக அனுமதிக்கான பெறுபேறு.
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.

இவற்றுடன் இணைந்த சுயவிபரக்கோவையை 30.11.2013க்கு முன் எமது அலுவலக முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

* சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகமுன்னோடிகளால் விரிவுரைகள்.
* ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி, வாரணம் எவ்.எம்.இல் பகுதிநேர ஒலிபரப்பாளர் களப்பயிற்சியும் கல்விச் சுற்றுலாவும்.
* இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
* பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

வாரணம் FM
Managing Director
Varanam FM
52, Hospital Road, Jaffna.
T.P: 021 221 9822
077 908 6737
E.mail: varanamfm@yahoo.com
www.varanamfm24.com
C/3193


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.